1448

Regd. No. M:.2210 வருஷ சந்தா ரூ. 1 8 0

ஆசிரியர் வை. மு. கோதை நாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் IV April 1927 இதழ் 5

OFFICE OF THE REGISTRAR OF ... 17 JUN 1927



SC
N211, N2259
N27·4·5
182834

ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிகளுள் சஞ்சிகை வெளியாகும்.

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமக்கு எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை மறக்காமல் தெரிவிக்கவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்கு புது விலாசத்தை 25 தேதிக்குள் தெரிவிக்காவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். இதனால் ஏற்படும் தவறுதலுக்கு நாம் பொறுப்பாளியல்ல.

# OUR HONORARY REPRESENTATIVES.

MR. R. VASUDEVAN
c/o "CAPITAL" LTD.,
Post Box No. 14,
CALCUTTA.

MR. SWAMINATHA PADMANABHA PILLAI,
Sri Siddhi Vinayagar Novel Depot,
112. Madras Street, PONDICHERRY.

---

# Our Principal Agents.

MR. V. KRISHNASWAMY,
22. Veljee Lukamjee Building
Matunga, Bombay.

MR. P. RAMALINGA CHETTIAR,
Stamp Vender,
Tirupapuliyur, Cuddalore.

MR. P. PALANIKUMARA PILLAI,
Meikanda Vilas Book Depot.
Virudhanagar.

MR. A. ABDUL GANI SAHIB,
Lebbai Street,
Srivaikuntam.

உ

ஓம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

OFFICE OF THE REGISTRAR OF ... 17 JUN 1927 MADRAS

மலர் IV | பிரபவஹு சித்திரைமீ April 1927 | இதழ் 5

ஸ்ரீ:

## திருமால்

## இரட்டை மணி மாலை

### கடவுள் வாழ்த்து.

பொங்குந் திரையிற் புனிதத் துயில் கொள்ளு மெங்கள்
செங்க ணெடியான் றிறங் கூறிச் சிறந்து வாழ
வெங்கும் புகழி னெழி லார்எகின் ஓங்கு நீழல்
தங்குங் குருகைத் தனி நாதனைச் சாற்று கிற்பாம்

### நூல்

*வெண்பா*

பூமகள்சேர் மார்பன் பொருந்து முயிரனைத்தும்
கோமகனுய்க் காக்குங் குறிப்புடையான்—நாமகள்சேர்
பூந்தா மரையான் புரிசடையான் போற்றுகழல்
தேந்தா மரைநெஞ்சே சேர்.

*கட்டளைக் கலித்துறை*

சேர்க்கும் புனற்கங்கைச் செஞ்சடை வானவன் செய்குறையைத்
தீர்க்கும் புனிதன் றிறமன்றி வேறோர் செயல் நினைவார்
ஈர்க்குங் கடுவினை யேழ்பிற வாழி யிடர்ப்படுவேர்
பார்க்கு மளக்கு மங்காந்தவன் பாதம் பரவுமின்!

(தொடரும்)

## ஹாஸ்யத் துணுக்குகள்.

நோயாளி:—ஐயா வைத்தியரே! என் தேக முற்றும் சிறங்குகள் வெடிக்கின்றன. அது எதனாலையா! அதற்கு மருந்து கொடுங்கள்.

வைத்தியன்:—உன் தேகத்தில் ரத்தமே இல்லை. இருக்கும் கொஞ்ச ரத்தமும் கெட்டுப் போயிருக்கிறபடியால் இவ்விதம் வெடிக்கின்றது. அதற்கு மருந்து கொடுக்கிறேன் சாப்பிடு.

நோயாளி:—என்ன ஐயா! எனக்குத் தெரிந்த யோசனைகூட உங்களுக்குத் தெரியவில்லையே? என் தேகத்திலிருக்கும் கெட்ட ரத்தத்தை வலிக்காமல் எடுத்துவிட்டால் பிறகு ரத்தமேது? சிறங்கேது? எல்லாம் பறந்து விடாதா! வீணாக காசு செலவிட்டு மருந்து எதற்கு சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டும்.

* * * *

கந்தன்:—நண்பா! உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் 'நான் அதைக் கண்டுபிடித்தேன்; இதைக் கண்டு பிடித்தேன்:' என்கிறார்களே அதுபோல நானுமின்று ஒரு யுக்தி கண்டுபிடித்துவிட்டேன்.

முகுந்தன்:—என்ன யுக்தியப்பா அது! எனக்குக் கூறலாகாதா?

கந்தன்:—உலகத்திற்கே தெரிவிக்கப் போகிறேனப்பா! எனக்கு இப்பொழுது சமீபத்தில் பெரிய கட்டி வெடித்து அதனால் ஜுரங் கண்டு மிகவும் பாதைப்பட்டு ஆபரேஷன செய்து படுத்திருந்தேனல்லவா? நான் செலவிட்டபணமும் பட்ட கஷ்டமும்.' அறியாமையினால் என்று எனக்கு இப்பொழுது தோன்றுகின்றது. இனிமேல் யாருக்குக் கட்டி வெடித்தாலும் மெல்ல வண்டியில் ஏறிச்சென்று ட்ராம் வண்டியிலேறி அங்கிருந்து மோட்டார் பஸ்ஸில் ஏறி, அங்கிருந்து மாட்டுவண்டியில் திருவொற்றியூர் வரையில் போய் திரும்பி அங்ஙனமே வருவார்களாயின் கத்திவைத்து அறுக்கும் பாதையின்றிக் கட்டிதானாகவே படாரென்று உடைந்து விடுவது திண்ணம். ஏனெனில் ஆபரேஷன் செய்த இடமே விறிந்துவிடும்படியாக அவ்விதம் பிரயாணம் செய்ததில் வலி எடுத்துக்கொண்டு மூன்று நாளாயிற்று வலி நிற்பதற்கு. கட்டியுள்ளவர்கள் சென்றால் பணச்செலவுமில்லாமல் தேக கஷ்டமும் இல்லாமல் போய்விடும். இதை என் அனுபவத்தில் கண்டறிந்தேன். பெரிய யுக்தியல்லவா நான் கண்டு பிடித்தது.

* * * *

பையன்:—பாட்டி! எங்களையும் பிரமதேவன் தான் சிருஷ்டித்தான்; உங்களையும் அவனேதான் சிருஷ்டித்தான். உங்களுக்கு மாத்திரம் இரண்டு முதுகு இருக்கின்றதே, அதெப்படி பாட்டி? காலையில்

182834

நான் வந்தபோது உருண்டை முதுகாகவிருந்தது; இப்போது நீண்ட முதுகாகவிருக்கிறதே. இதுதான் எனக்குச் சிரிப்பாகவிருக்கிறது.

கிழவி:—போடா பையா! என்னைப்பார்த்து கேலியா செய்கிறாய்? உறக்க சத்தம் செய்யாதே. யாராவது வரப்போகிறார்கள். என் மருமகள் என்னை வேலை செய்யும்படி உபத்திரவிக்கின்றாள். அதற்காக நான் பிறர் எதிரில் மிகவும் தள்ளாத கிழவிபோல் முதுகைக் கூனலாக வளைத்துக்கொண்டு நடக்கின்றேன். யாருமில்லாத சமயத்தில் சாதாரணமாக நடக்கிறேன். இதை யாரிடத்திலும் சொல்லாதே யப்பா! என் திருட்டு வெளியாய்விடும் நீ நல்ல பையனல்லவா?

பையன்:—(சிரித்துக்கொண்டே) பாட்டி! நான் என்வாயினால் யாரிடத்திலும் சொல்வதேயில்லை. கையினால் கடிதத்தில் எழுதி எல்லோருக்கும் காட்டிவிடுகிறேன். அதுசரிதானே பாட்டி?

வை, மு கோ.

# பத்திரிகைகளின் மதிப்புரை

## கிருஷிகன்.

(Feb. 1927)

### "வைதேகி"

சித்திரப்படங்களுடன் கூடிய ஓர் துப்பறியும் தமிழ்நாவல்.

ஸ்ரீமதி, வை. மு. கோதை நாயகியம்மாளால் எழுதப் பட்ட 'வைதேகி' என்னும் தமிழ் நவீனம் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டுப்பல மாதங்களாயின வாயினும், எமக்கு ஏற்பட்ட பல அசௌகரியங்களால் இதுவரை விமர்சனம் செய்ய சாதய மில்லாமற் போனதற்காக மிகவும் வருந்துகிறோம். ஷை நவீனமானது பிரைமரி பாடசாலைகளில் வாசித்த சிறுவர் சிறுமிகள்கூட எளிதில் வாசித்தறியக்கூடிய சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. எக்குலத்தாராயினும் எவ்வளவு கஷ்டம் ஏற்பட்ட போதிலும் கற்பை இழக்கக் கூடாதென்னும் நீதியைப் போதிக்கிறது. கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் போன்ற பெரியாருடைய அருங்கவிகள் ஆதாரமாய்ப் பலவிடங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வாசிக்க ஆரம்பித்தது முதல் முடிக்கும் வரை கதையின் போக்கை உற்சாகத்துடன் உற்று நோக்கும்படித் தூண்டுகிறது. டெம்மி 540 பக்கங் கொண்ட இந்த நவீனம் (2 பாகங்களும் சேர்ந்து) ரூ 2-0-0 விலை போடப்பட்டிருக்கிறது. நவீனம் வாசிப்பதில் ஆசை யுள்ள பலரும இதை வாங்கி வாசித்து ஆனந்தமடைவார்களென்று நம்புகிறோம். (ப-ர்)

## இந்துநேசன் (26—2—27.)

### "ஜகன்மோகினி"

"ஜகன்மோகினி" என்னும் மனோஹரப்பெயர்கொண்ட ஒரு மாதாந்தப் பத்திரிகையின் 4-ம் மலரின் முதல் மூன்று சஞ்சிகைகள் வரப்பெற்றோம். இதில் கொஞ்ச பாகத்தில் ஹாஸ்யத்துணுக்குகள், இதரப் பொது விஷயங்கள் ஆகிய இவைகளும், பெரும் பாகத்தில் நாவல் எனும் கற்பனைக்கதையும் வெளிவருகின்றன. விஷயங்களின் போக்கைக் கவனிப்போமானால், இதற்கு "ஜகன்மோகினி" என்னும் பெயர் ஏற்றதே என்று கூறவேண்டும். 'வைதேகி' என்ற இன்சுவை ததும்பும் இனிய நாவலை எழுதிய ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் தற்போது 'பத்மசுந்தரன்' என்னும் நாவலை எழுதி வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் மேனாட்டு ஆசாரத்தைத் தழுவுவதால் உண்டாகும் கேடுகள் அதனில் மிகவும் ரஸமாக எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நாவலெழுதுவதில் இத்துணைத் திறமைவாய்ந்த ஸ்ரீமதி அம்மாளுக்கு இன்னும் இதைப்போன்ற நாவல்கள் பலவற்றை வெளியிட்டுத் தமிழுலகத்திற்குத் தொண்டுபுரியுமாறு ஈசன் நீண்ட ஆயுளும், ஆர்வமும், ஆற்றலும் அளிப்பாரென்று அன்பரன்பனை வழுத்துகின்றோம்.

## 'கற்பகம்' புதுவை.

### (December 1926)

ஓர் மாத சஞ்சிகை. இதில் பல அருமையான நாவல்களும், ஹாஸ்ய விநோதங்களும், வியாசங்களும் வெளிவருகின்றன. பெரும்பான்மை ஸ்திரிகளால் வரையப்படுகின்றன. குறைந்த சந்தாவுடன் கூடிய சிறந்த நாவல் சஞ்சிகை இது.

## 'நியாயாபிமானி' காரைக்கால்.

### (19-1-27)

இதில் படிக்கப்படிக்க இனிக்கும் துப்பறியும் நாவல்களும் அரிய விஷயங்களும், ஹாஸ்ய விநோதங்களும் நிறைந்து ததும்புகின்றன.

## 'சுதேச நாட்டியம்' யாழ்ப்பாணம்.

### (12-1-1927)

இப்பெயர் புனைந்து ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் வெளியாகும் நாவற் பத்திரிகையொன்று வரப்பெற்றோம். எமக்கனுப்பிய நாலாம் மலர் இரண்டாம் இதழ் இனிய செந்தமிழ் நடையிற் சிறந்த நாவல்களைத் தன்னகத்தே கொண்டது. நாவல் வாசிக்க விரும்பும் நேயர்களுக்கு இப்பத்திரிகை சிறந்ததாகும். எமக்கனுப்பிய பிரதியை அன்பாயேற்று அப்பத்திராதிபர்க்கு எமது துதியைக் கூறுகின்றோம்.

## 7-வது அதிகாரம்

### கரும்பு ரஸத்தில் கனிரஸங் கலந்தது

பத்மவல்லி பேசிக்கொண்டேயிருக்கையில் மயக்கம் மேலிட்டு ப்ரக்ஞையற்று விட்டசமயம் எல்லோரும் கலங்கிப்போய் இன்னது செய்வதென்று தெரியாமல் வயிற்றில் ஒருவிதமான திகிலும் குடல் நடுக்கமும் அடைந்து கண்ணீர் வடியச் செயலற்றுவிட்டார்கள். நமது சுந்தரன் முதல் நாள் முதலாகத் தன்மனதையடக்க வியலாது பத்மத்தினிடத்திலேயே செலுத்தியவனாயிருந்தான். அதனால் அவன் அந்த நினைவாகவே இன்பமும் துன்பமும் மாறிமாறிப்பெற்றவனாய் நெக்கு நெக்குருகிப் பாகாயோடிக்கொண்டிருந்தான். அச்சமயம் தான் எதிர்பாராதவிதமாய்த் தனக்குக் கிட்டாப்பொருளென மதித்து ஏங்கியிருந்ததற்கு மாறாக அந்த வஸ்துவினருகிலேயே தான் இருந்து தன் கையினால் சிகிச்சைசெய்யும்படியாக சாக்ஷாத் கருணாசாகரனை கடவுள் சேர்த்துவைத்ததையும் தன்னிடம் பத்மவல்லியின் தந்தை கரை கடந்த ப்ரேமையும் மதிப்பும் உள்ளாழ்ந்த ஒருவித ச்வாதந்தரியமும் வைத்துப் பேசியதையும், அதற்கனுகூலமாக பத்மவல்லியும் தான் அவளைக் காப்பாற்றியதன் பொருட்டுத் தன்னிடம் உண்மையான நன்றியறிதல் செலுத்தி அதற்கேற்ற அன்பும் காட்டி வருவதையும், தான் இன்பவெள்ளத்தில் மிதக்கும்படியாக அவள் குயிலினுமினிய குரலுடன் மடவாருக்குரிய ஆபரணங்களாகிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கும் சிறிதும் குன்றாமல் வெகுமரியாதையாய்ப் பேசியதைக் கேட்டதனால் உண்டான மகிழ்ச்சியையும் எண்ணி வியந்தபடியிருந்தான். இச்சமயம் அந்த எண்ணம் காற்றில் பறக்கும் பஞ்சுபோல் பறக்கக் கூடியவிதமாய் பத்மத்திற்குத் திடீரென்று ஜ்வரமதிகரித்தது. அதன்வேகத்தினால் அவள் அலறித் துடிதுடித்து தனது உயிர் சினேகிதையைக் காண அத்தருவாயிலும் ஆவல்கொண்டு தன்தாயை இறைஞ்சிக்கேட்டு மீண்டும் ஏதோ கூறிக்கொண்டே மயக்கத்திலாழ்ந்தாள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சுந்தரன், சற்று முன்பாக எந்தவிதமான மனச் சந்துஷ்டியடைந்தானோ

அதற்குப் பன்மடங்கான கவலையும் துன்பமும் அவனை வந்துசூழ்ந்து கொண்டன. அவனை மீறி அவன்கண்களில் நீர் அருவிபோல் வடியவாரம் பித்தது. அதனை யவன் வெகு ஜாக்ரதையாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் துடைத்துக்கொண்டு பத்மவல்லியின் பிதாவிற்குத் தேறுதல் கூறியவாறு தனக்குத்தெரிந்த சிகிச்சை யெல்லாம் செய்துகொண்டே வந்தான். அவன் மனத்தில் எவ்வளவு திகிலும் துயரமும் குடிகொண்டிருக்கின்றனவோ அதற்கு அனுகுணமாக அவனது கைகால் மார்பு எல்லா அவயவங்களும் விடவிட என்று நடுங்கத்தொடங்கின. மார்பில் கோடாலியால் பிளப்பதுபோன்ற பெரிய படபடப்புண்டாயிற்று. ஹ்ருதயம் வெடித்துவிடுமோ என்று ஐயுறும்படியாக விருந்தது. அவன் தன்னாலானவரையில் எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு பத்மத்தை மூர்ச்சை தெளிவிப்பதிலேயே தனது முழுகவனத்தையும் செலுத்தி மருத்துவ முறைப்படியான அவுடதங்களைப் பலவிதமாகவும் பலதினுசாகவும் உட்செலுத்தி வந்தான். எத்தனையோ திராவகங்களை முகரச்செய்தான். தனது வைத்தியரை உடனே அழைத்து வருவதற்கு ஆளையனுப்பினான். பத்மம் படுத்திருக்கும் பரிதாபம் ஒருபுறமும் அவளின்பெற்றோர்கள் கதறித்துடிப்பது ஒருபுறமுமாகச் சுந்தரனை உருக்குகின்றன. அவன்தனது வைத்தியரை அழைத்து வருவதற்கு மோட்டார் வண்டி அனுப்பியும் இன்னமும் அவர் வரவில்லையே! என்றுமனந்தவித்த வண்ணமிருக்கும்தருணத்தில் "நெருப்பு நெருப்பு" என்று கூவுவது கேட்டது. அது சுந்தரனுக்குப் பூகம்ப அதிர்ச்சியைப்போல் நடுக்கத்தை யுண்டாக்கியது. அந்தச் சமயம் அவன் மனமும் தேகமும் பதறிய பதறல் இவ்வளவு தான் என்று சொல்லச் சாத்யமற்றதாய்விட்டது. அங்கு நெருப்பு என்று கேட்டதும் மற்ற எல்லோரும் ஆ! என்று பதறிக்கதறி எவ்விடத்தில் நெருப்புப் பிடித்துக்கொண்டது என்பதைக் கவனித்தார்கள். பத்மவல்லி படுத்திருந்த ஹாலுக்குப் பக்கத்து ஹாலிலேதான் நெருப்புப்பிடித்து எரிகின்றது. படால் படால் என்ற ஓசைகேட்கிறது. அதையறிந்த ஏனையோரும் "ஐயோ! இதென்ன அநியாயம்! திடீரென்று இத்தகைய நெருப்பு எங்கிருந்து பிடித்துக்கொண்டது; ஆ! என் கண்மணியின் நிலைமையைக்கண்டு கலங்கிய தருவாயில் இந்தப் பரிபவமும் கூடவேண்டுமா? ஏ கடவுளே! இதென்ன உன் திருவிளையாடலின்

கூத்தோ! அந்தோ! இத்தகைய ஆபத்து வேளையில் அதற்கு மேலான பெரும் விபத்தையும் கூட்டிவைக்க வேண்டுமா? ஆ! ஐயோ! இதை எவ்வாறு அணைக்கப்போகிறார்கள்? இதற்கு அடுத்த அறையில் பத்மம் அபாயகரமாய்ப் படுத்திருக்கிறாளே! இத்தீ அங்கும் பரவி விட்டால் என்னசெய்வோம்'' என்று பலவிதமான குழப்பத்தில், இன்னது செய்வதென்றறியாது கலங்கித் தாறுமாறாக நெருப்புப்பிடித்த விடத்தைப் பார்ப்பதும் பத்மத்தை பார்ப்பதுமாக விருக்கிறார்கள். பணிமக்களும் கூக்குரலிட்ட வண்ணம் அந்த அறையிலிருந்து வெளியிலெடுக்கக்கூடிய சாமான்களைச் சிலர் வெளிப்படுத்துகிறார்கள். சிலர் குடத்தில் ஜலத்தைக்கொண்டு தீயின்மீது கொட்டுகின்றார்கள். அந்த ஹாலில் இருந்த அனேக சாமான்கள் தீக்கிரையாகின்றன. இந்த பயங்கரமான தீயின் எரிச்சலையும், விபரீதமான கூக்குரலையும், பரிதாபகாமான பத்மத்தின் பெற்றோரின் நிலைமையையும், அபாயகரமான பத்மத்தின் தேக நோயையும் கண்ட சுந்தரனுக்கு அப்போதிருந்த மனநிலைமையைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கே சாத்யமன்று. அதை யூகித்தறிதலே நன்று. மேலே குறித்த விஷயங்களினால் சுந்தரன் முற்றிலும் கலங்கி அவன் அங்கங்கள் சோர்ந்துபோய்விட்டன. என்றாலும் அவனுடைய காருண்ய குணமானது, எவ்வாறேனும் தனது உயிரைக்கொடுத்தாகிலும் பிறருடைய இடரைத்தீர்த்துக் காத்தல்வேண்டும்; அதற்குப் பின்னடையாமல் முயற்சித்து ஒரு கைபார்த்துவிடவேண்டும் என்ற தைரியத்தைக் கொடுத்தது. அவன் அவ்வமயம் பத்மத்தின் நாசியில் எதையோ முகரவைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன், ''நாம் இனி அரைக்கணமும் வீணாக இருக்கக்கூடாது. சாதாரண மனிதர்கள் வெளியில்சென்று தப்புவதற்குசாத்யமுண்டு.நோயாகப்படுத்திருக்கும் பத்மம் என்ன விதமாகத் தப்புவாள்? மேலும் தீயோ இந்த அறைப் பக்கமாகத் தொடர்ந்து வருகின்றது.நிமிஷத்திற்கு நிமிஷம்அபாயமே அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் இந்நோயாளியை இங்கு விட்டிருப்பதே பிசகு'' என்று எண்ணியவனாய்ச் சரேலென்று எழுந்துமுதலியாரைப் பார்த்து ''ஐயா! முதலில் தங்கள் குழந்தையை அப்புறப்படுத்துவது தான் உசிதம், தாமதிக்கலாகாது. ஆள்கள் இம்மஞ்சத்துடன் எடுத்துச் செல்லலாம் என்றால் அவர்கள் முக்கியமான வேலையிலிருக்கிறார்கள்.

ஆகையால் தாங்கள் யாரேனும் அவர்களை இவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்துங்கள்'' என்றான்.

இதைக்கேட்ட முதலியாரும் அன்னாரின் மனைவியும் "ஐயோ எங்களுக்கு இப்போதிருக்கும் ஓடுக்கத்தில் குழந்தையை எடுத்துச் செல்கையில் கீழேபோட்டுவிடுவோம். எங்கள் கைகால்கள் நடுங்குகின்றன. தாங்களே என்ன செய்யவேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்றார்கள். முன்னே துணிந்து கடலிலிருந்து பத்மத்தைக் கரைசேர்த்ததுபோல் இப்போதும் செய்யத்துணியலாம். இங்கே அவளுடைய பெற்றோர்களிருக்கையில் தான் துணிவாக அவளைத் தூக்க முயன்றால், ஒருகால் அவர்கள் தன்னைப்பற்றியாதாயினும் தப்பபிப்பிராயம் கொள்ளப்போகிறார்களே என்ற யோசனையால், அவன் நன்றாகப் படித்த விவேகியாகையாலும் இயற்கையிலேயே உத்தம குணங்கள் அமையப்பெற்ற புத்திசாலியானபடியாலும் முன்னெச்சரிக்கையாகக்கேட்டான். அதற்கு அவர்கள் பதில்கூறியதும், உடனே ஓரே பாய்ச்சலாகப்பாய்ந்து ஒரு சிறு குழந்தையை எடுத்துச்செல்வது போல் பத்மாவைத் தூக்கித்தோளில் சாத்திக்கொண்டு அந்த விடத்திற்கு இருபது கஜதூரத்திற்கு அப்பாலிருந்த ஓரிடத்தில் விசுப்பலகையின்மீது விட்டுவிட்டு நாரஸை அங்கே காவல் வைத்துவிட்டுத் தான் ஓரேஓட்டமாகத்தீப்பிடித்த விடத்திற்குவந்து அங்கிருந்த ஆட்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள ஆற்றங்கரையிலிருந்து மணலைக் கூடையினாலும் முறத்தினாலும் மேல் அங்க வஸ்திரத்தினாலும் வாரிக்கொண்டுவந்துதீப்பிடித்து எரியும்இடத்தில்கொட்டும்படிச் செய்தான்.இன்னும்சில பணியாட்கள் ஜலத்தையும் விடாமல் கொட்டினார்கள். அவ்விதம் செய்தும் அவ்வறையில் இருந்த சாமான்களில் தீப்பிடித்துக்கொண்டு ஒன்றேன்றாய் எரிந்துகொண்டே வருகிறது. இதைக் கண்ட சுந்தரன் வீரத்தைக் கைவிடாமல் தனது சட்டை முதலிய உடைகளையெல்லாம் நீக்கிவிட்டுச் சிறிய முண்டு ஒன்றை அரையில் கட்டிக்கொண்டு அவ்வறையில் தன்னுயிரை த்ருணமாக மதித்து நுழைந்தான். அனல் நாலாபக்கமும் வீசுகின்றது. இவன் துணிவாய் உள்ளேசென்றதைக்கண்டமுதலியார்''ஐயோ! வேண்டாம், வேண்டாம்; உள்ளே போகவேண்டாம். எதற்குத் துணிந்தாலும் நெருப்பிற்கு மாத்திரம் நாம் துணியலாகாது'' என்று கூச்சலிடு

கிறார். சுந்தரன் அதற்குப்பதில்கூறுமல் அவ்வறையில்மேஜைநாற்காலிகள் சிறிய கயிற்று மூங்கில் கட்டில்கள் இவைகள் எரிந்து கொண்டிருந்ததைத் தைரியமாக அவற்றின் எரியாத ஒரு பாகத்தைப் பிடித்துத் தாதர வென்று இழுத்துக்கொண்டு வந்து அருகிலுள்ள ஆற்றங்கரையில் தள்ளிவிட்டான். இவ்வாறே அநேக சாமான்களை வீதியில் உள்ள ஆற்றங்கரை மணலிலே போட்டுப் புரட்டி அவைகளை அணைத்தான். மூங்கில் கட்டில்களும், இன்னுமற்ற சில வஸ்துக்களும் எரிந்து வெடித்துக் கருகிப்போய்விட்டன. அங்கு வைக்கப்பட்டிருந்த சில படுக்கைகள், தலையணை, ஜமக்காளம், மெத்தை, பாய்கள், முதலியனவெல்லாம் சாம்பலாய் விட்டன. மிச்சமான சாமான்களை வெளிப்படுத்தி விட்டபடியால் நெருப்பு அதற்குமேல் பலக்க இடமில்லாமல் போய்விட்டது. ஏனெனில் அந்த பங்களாவின் ஒவ்வொரு கதவுகளும் மேலே போட்டிருக்கும் சரங்களும் இரும்பாலானது பற்றி அவற்றில் தீ பிடிக்கவில்லை. பிறகு அரைமணிக்கெல்லாம் அவ்வறையில் நெருப்பு தணிந்தது. தண்ணீரை ஊற்றியது ஊற்றியபடியேயிருந்து அந்த அனலையும் அணைத்தார்கள். இதற்குள் அக்கம் பக்கமுள்ளவர்கள் வந்து கூடி விசாரித்துச் சுந்தரனின் வீரதீர பராக்கிரமத்தைக் கண்டு வியந்து, பலவாறுபுகழ்ந்து கூறிப் பத்மத்தைக் கண்டு வருத்தப்பட்டுச் சென்றுர்கள். சுந்தரன், கைகளில் தீயினுல் சிறிது சூடு ஏற்பட்டுக் கொப்பளமும் கண்டு விட்டது. சுந்தரன் நெருப்பை யணைத்துவிட்டுத் தான் முன்போல் சட்டையையணிந்து கொண்டு பத்மத்தருகில் வந்து அவளை முன் போலவே அவ்விடத்திற்குக் கொண்டு விட்டுவிட்டு அந்தத் தீ அவ்வறையில் எவ்வாறு பிடித்தது என்பதை விசாரிக்கத் தொடங்கினுன். பணிமக்கள் தமக்கு ஒன்றும் தெரியாதென்றும், திடீரென்று அங்கிருந்த மேஜை மீது போடப்பட்டிருந்த துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டு எரிவதைப் பார்த்தோமென்றும் அணைப்பதற்குள் அதனருகிலிருந்த மெத்தை, பாய், கட்டில் முதலிய விடத்திற்கு ஒரு நொடியில் தீ பரவி விட்டதென்றும், உடனே கூச்சலிட்டோம் என்றும் கூறினுர்கள். அதற்குள் சமையல்காரியை அழைத்து அவளை விசாரித்ததில் அவள் "நான் அவ்விடத்திற்கு நெருப்பு எதற்கும் கொண்டுவரவில்லை, நரஸு தாகத்திற்குத் தண்ணீர்கேட்டாள். அதற்கு நான் அடுப்பில் செம்பில் வைத்

திருந்த தண்ணீரைக் கொண்டுவந்தேன். அந்தம்மாள் அப்போது எஜமானியம்மாளிடத்தில் வேலையாகவிருந்தபடியால் நானதைமேஜை மீது வைத்துவிட்டுப் போய்விட்டேன். பிறகு எனக்கு ஒன்றும் தெரியாது. நெருப்புப்பிடித்து எரியும்போது தான் நானும் பார்த்தேன்" என்றாள்.

இதைக்கேட்ட சுந்தரன் நரஸைப்பார்த்து "அம்மா! நீங்கள் தீர்த்தத்தை எப்போது எடுத்துக்கொண்டீர்கள்? அந்தச் செம்பெங்கே? என்றான். அதற்கு நரஸ் "ஐயா எனக்கு தாகமெடுத்து நான் தீர்த்தம் கேட்டது தான்; அதை நான் சாப்பிடவில்லை. அதற்குள் அம்மாளுக்கு உடம்பு அதிகமாய் விட்டபடியால் எனக்கு எழுந்து வெளியில் வருவதற்கே முடியாமல்போய்விட்டது. அந்தச் செம்பு அந்த மேஜையின்மேலேயே இருக்கிறது" என்றாள். உடனே சுந்தரன் அந்தச் செம்பு வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச்சென்று அதை எடுத்து யோசனையோடு செம்பின் அடிப்பாகத்தைப் பார்த்தான். அந்தச் செம்பின் அடியில் கரியொன்று ஒட்டியிருந்ததுகண்டு அங்கு விட்ட ஜலத்தினுல் அது கையில் எடுத்த உடனே கீழே விழுந்துவிட்டது கண்ட சுந்தரன் முதலியாரைப்பார்த்துச் செம்பையும் அதனடியில் விழுந்திருந்த கரித்துண்டையும் காண்பித்து 'ஐயா! இச்செம்பைகரிக்கும் மட்டியில் வைத்து ஜலம் காய்ச்சப்பட்டிருக்க வேண்டும். நன்றாக வேகாதிருக்கின்ற கரிகள் சில பற்றவாரம்பித்ததும் அவற்றில் ஒருவிதமான பிசின் உண்டாய் புகை கிளம்பும். அந்தக்கரிகள் சில சமயத்தில் பாத்திரத்தடியில் ஒட்டிக்கொள்ளும். அதேபோல் இந்தச் செம்பிலும் அடியில் கரி ஒட்டிக்கொண் டிருந்திருக்கின்றது. அதைக் கவனிக்காமல் சுடுமென்று துணியால் பிடித்துக்கொண்டு வந்து மேஜையின்மீது அந்தம்மாள் வைத்துவிட்டுப் போயிருக்கின்றார்கள். அந்தக் கரி நெருப்புப்பிடித்த கரியாகையால் அது மேஜைமீதிருந்த துணியில் முதலில் பிடித்துக்கொண்டு அதன்மூலமாகப் பரவிவிட்டது" என்றான். செம்பையும் கரித்துண்டையும் பார்த்த முதலியார் சுந்தரன் சொல்லியதைக்கேட்டு உண்மையையறிந்து கொண்டார். சுந்தரனைப் பார்த்து "ஐயா! நான் முதலில் யாரோ காதகர்கள்தான் வந்து நமக்குத் தீங்கிழைக்க இத்தகைய கொடுமை செய்துவிட்டார்களென்று எண்ணிவிட்டேன். நீர் உம்முடைய அதி கூர்மையான யோசனை

யினால் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டீர். நமக்குப் பகைவர்கள் யாருமில்லையே, அங்ஙனமிருக்க இந்த வேலையை எவனோ காதகன் செய்து விட்டான் என்று தீர்மானித்துக் கொண்டு நீங்கள் நெருப்பை அவித்த தருணம் நான் முக்கியமான அறைகளைப் பார்த்துக்கொண்டு வந்தேன். அங்கு யாதொரு சின்னமும் ஏற்படவில்லை என்பதைக் கண்டு இத்தீ எவ்விதம் பிடித்தது என்று யோசித்தேன். அதை நீர் நிவர்த்தி செய்துவிட்டீர்''. என்று பேசிக்கொண்டிருக்கையில் வீதியில் வண்டி வந்து நின்றது. உடனே சுந்தரன் முன்னால் சென்று வைத்தியரை அழைத்துவந்து பத்மத்தின் நிலைமை அனைத்தையும் தாம் காலையில்வந்து பார்த்ததுமுதல் இது பரியந்தமுள்ளவற்றை யெல்லாம் கூறினான். பிறகு வைத்தியர் மீண்டும் இஞ்செக்ஷன் செய்து பல அவுடதங்களை உட்செலுத்தினர். சற்று நேரத்திற்கெல்லாம் பத்மம் நினைவைப் பெற்றாள். அவளுக்கு அப்போது ஜுரம் அதிக வேகமாகக் காய்ந்து கொண்டிருந்தது. முதலியார் வைத்தியரைப் பார்த்து "ஐயா! காலையில் நன்றாகக் குணமேற்பட்ட பிறகு மீண்டும் இவ்விதம் பலப்பட்டுவிட்டதே! என்ன செய்வது குழந்தைக்கு பயமில்லையா? குணமாய்விடுமா?'' என்று மிகவும் பரிதாபகரமாகக் கேட்டார்.

இதைக்கேட்ட வைத்தியர் முதலியாருக்குத் தேறுதல் கூறிவிட்டுச் சுந்தரனைப் பார்த்து "அப்பா! ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்; நான் காலையில் வருகிறேன்'' என்று கூறினர். அப்போது முதலியார் மகிழ்ச்சியோடு பேசத்தொடங்கி "ஐயா! கடவுளின் திருவிளையாடலை நான் என்னென்று கூறுவேன். நேற்று என்னுடைய குழந்தையைக் கடலிலிருந்து கரைசேர்த்த வள்ளல் யாரோவென நேற்றுரைத்தேனே அந்த மகானுபாவன் தான் இவர். இன்று உங்கள் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினேன்; உடனே இவர் வந்தார். இவரைக் கண்டதும் எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. நான் எதிர்பார்த்திருந்த மனிதர் மருத்துவராகவே அப்போது உதவி புரிந்தது போதாதென்று இப்போதும் அருகிலிருந்தே உதவி புரியும்படியாகக் கடவுள் இவரை இங்கு சேர்த்துவைத்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமன்றோ! இன்னும் அதோடு நிற்காமல் இங்கு சற்றுமுன் அகஸ்மாத்தாக இந்தப் பக்கத்து அறையில் தீப்

பிடித்துக்கொண்டு பலமாக எரிய ஆரம்பித்து விட்டது. அதையும் யுக்தியாக இந்த வீரரே அவித்தார். ஆஹா! இவருடைய ஒவ்வொரு குண விசேஷத்தையும் நல்ல மாதிரியையும் காணக் காண எனக்குண்டாகும் சந்தோஷத்திற் கோரளவே இல்லை. இவரைப்பற்றி இவர் எதிரிலேயே புகழ்வது முகஸ்துதி என்று நினைக்கலாம். நானப்படி முகஸ்துதியாகக் கூறவில்லை. இவருடன் இன்று பழகிய சற்று நேரத்திற்குள் இவரிடத்தில் என் மனமானது புகைப்படம்போல் பதிந்துவிட்டது. ஆஹா! என்ன அமிர்தம் போன்ற குணம்? என்ன வீரத்தனம்? எவ்வளவு மரியாதை! கர்வம் என்பது கடுகளவேனுமுண்டோ? கிடையவே கிடையாது. மன்னுயிரைத் தன்னுயிரைப்போலக் காக்கவேண்டுமென்று மன்னருக்குச் சொல்வார்கள். இப்போது இந்த உத்தமரிடத்தில் அத்தகைய அருமையான எண்ணமும், குணமும், தெய்வபக்தி முதலிய சகலமும் பொருந்தி யிருக்கின்றன. இத்தகைய மாண்பு பொருந்திய புத்திரனைப் பெற்ற உத்தமர்களின் புண்ணியந்தா னென்னே என வியப்பாயிருக்கிறது'' என்றார்.

வைத்தியர்:—சகல அம்சங்களிலும் அவனைப்போன்ற பையன் அகப்படுவதே அரிதுதான். அவனுடைய குடும்பமென்னவோ கேவலம் ஏழ்மையானது. அவனுடைய தகப்பனாரின் குணமும் இவனுடையதைப் போன்றதே................உம். தங்களுடைய குண விசேஷத்திற்கும் தங்கள் குமாரனின் குணத்திற்கும் எவ்வளவு வித்யாசமிருக்கிறது பாருங்கள். இப்படி தந்தையும் மகனும் ஒரு மாதிரியான நற்குணங்களமையப் பெற்றவர்களா யிருப்பது அருமைதான். தங்களுடைய இப்போதையமனக்கஷ்டங்களை எல்லாம் நான் நன்கறிவேன். இன்று பத்திரிகையைப் பார்த்ததும் எனக்குச் சொல்லவியலாத வருத்தம் உண்டாய்விட்டது. என்ன செய்யலாம் எல்லாம் கால வித்தியாசந்தான். அந்த அபாண்டத்தை வீணாக அவன் தலையில் யாரோ சுமத்தி இருப்பார்களேயன்றி உண்மையானதேயல்ல என்பது என் மனத்தில் உறுதியாகத் தோன்றுகின்றது. ஏன் நீங்கள் அவ்விஷயமாக விசாரித்து ஜாமீனில் பையனை அழைத்துக் கொண்டுவரலாகாது?'' என்றார். இதைக்கேட்ட முதலியார் ''நம்முடைய குடும்ப விஷயமெல்லாம்தங்களுக்குத் தெரிந்திருக்கின்றபடியால் அதை மீண்டும் நான் கூறுவது

அசாவசியம்; எது எப்படியிருந்தாலும் அவைகளெல்லாம் வெளியாருக்குத் தெரியாது பாருங்கள். வீணில் நம்மீது குறை கூறத்தான் வருவார்கள். அதற்கு இடமின்றி நான் காலையில் இச்செய்தியை யறிந்தவுடனே எனது குமாஸ்தாவையும் நண்பரையும் கையில் ரொக்கத்துடன் அனுப்பியிருக்கிறேன். அதோடு உண்மையை அறியும்பொருட்டு நமது துப்பறியும் நிபுணர் ராஜாராம் நாயுடுவினிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். நான் நேரில் சென்று பார்க்க என் மனம் சகிக்கவில்லையாதலால் அவர்களை யனுப்பினேன்.'' என்றார்.

இவர்கள் இவ்விதம் பேசிக்கொள்ளும் தகவல் நமது சுந்தரனுக்குத் தெரியாதாகையால், அந்த விஷயத்தை என்னதென்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவன் மனதில் அவா உண்டாயிற்று; என்றாலும் விஷயமோ மகாவிபரீதமானதாகவும்முதலியாருடைய புத்திரனை சம்மந்தப்படுத்தியதாகவு மிருப்பதால் அதனைக் கேட்கவும் மனந் துணியவில்லை. அதைத் தெரிந்துகொண்டு தன்னாலியன்ற உதவியாதாகிலும் செய்யலாமே என்ற எண்ணம் ஒருபுறம் அவனை பாதிக்கின்றது. அத்தகைய விஷயத்தைத் தான் திடீரென்று கேட்பது பிசகென வெண்ணி வாளா விருந்துவிட்டான். பிறகு வைத்தியர் சுந்தரனிடம் பத்மத்தின் சிகிச்சைகளைப்பற்றி விவரம் கூறிப் பின்னர் அவர் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

சுந்தரன் முதலியாருக்கு அநேக விதமான விஷயங்களைச் சொல்லி அவரது வருத்தத்தைச் சற்றாகிலும் மாற்றவேண்டும், என்று எண்ணியவனாய் முதலியாரைப் பார்த்து, "அன்பீர்! தாங்கள் இனிமேல் கவலையற்று நித்திரை செய்யச் செல்லலாம். நான் விழித்துக் கொண்டு தங்கள் குமாரத்தியைக் கவனித்துக் கொள்கிறேன்.'' என்றான்.

முதலியார்:—ஐயா! எனக்குக் கவலையற்றுத் தூங்கும் தினமும் இனிமேல் வரப்போகின்றதா? தங்களுக்கு என்னுடைய குடும்ப வரலாறெல்லாம் தெரியாதாகையால் அதைச் சொல்லித் தமக்கு வருத்தத்தை உண்டாக்க வேண்டுமே என்று நான் வாளாவிருக்கிறேன். சற்றுமுன் வைத்தியர் பேசியது தங்களுக்கு விவரமாகத் தெரிந்திரா விட்டாலும் ஏதோ சுருக்கமாகவாவது தெரிந்திருக்குமென்றே

நினைக்கிறேன். ஈச்வரன் எனக்கு ஓர் ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் கொடுத்தார். ஆண் பிள்ளையால் எனக்குச் சந்தோஷமே கிடையாது; சதா வருத்தமே ஏற்படும்படியாக என் தலையில் எழுதிவிட்டான் பிரமன். இந்த விஷயம் குழந்தையறியக் கூடாதென்பது எனது கருத்து. இப்போது அவள் நித்திரை செய்வதாலும், நாம் அவளுக்கு அருகிலில்லாமையாலும் கூறுகிறேன் என்று தமது புத்திரனைப்பற்றி அன்று பத்திரிகையில் பார்த்த வரலாறு முதல் எல்லாவற்றையுங்கூறி "ஆஹா! எமது அருமைபத்மவல்லியின் முகாரவிந்தத்தை நோக்குவதன் ஆநந்தத்தினாலேயே நாங்கள் உயிரோடிருக்கின்றோம். இல்லையேல் நாங்கள் என்றைக்கோ மடிந்துபோயிருப்போம். அவளுடைய அம்ருதம் போன்ற குணமும், புத்தியின் விசாலமும், அவளுடைய ரூபலாவண்யமும் பெரியோரிடத்துப்ரேமையும் கடவுளிடத்து பக்தி முதலிய சகலமான உத்தம லக்ஷணங்களை ஒருருவாகத் திரட்டி எமக்களித்த அந்தக்கடவுளின் கிருபைக்கு நாங்கள் ஒருவிதத்தில் பாத்திரமாக விருப்பது சற்று மகிழ்ச்சியே யன்றி, ஆண் மகவினால் எமக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தினால் எங்களுக்கிருக்கும் சிறிய இன்பமும் மேகத்தில் கண்ட சந்திரனைப்போல் மறைந்து விடுகின்றது. இப்படிப்பட்ட துன்ப நிலையிலும் அந்த இன்பந்தான் எங்களின் உயிரைச் சற்றுப் பிடித்துக்கொண்டிருக்கிறதென்றே திட்டமாகக் கூறுவேன்" என்றார். இப்படி அவர் கூறும்போது அவர் கண்களிலிருந்து நீர் வடிந்துகொண்டே இருந்தது. இதைக்கண்ட சுந்தரனின் மனமும் வருத்த மேற்கொண்டது. அவன் கண்களினின்றும் நீர் வடியவாரம்பித்தது. அவன் அதையடக்கிக்கொண்டு, "எத்தனைதான் துஷ்டத்தனமாக விருந்தபோதிலும் கேவலமான திருட்டு வேலையில் அவன் ஒருநாளும் இறங்கியே இருக்கமாட்டான் என்றே தோன்றுகின்றது. ஐயோ! பாவம். அந்த வருத்தம் தாங்காமல் விரக்தி மேற்கொண்டு விட்டார்கள் போலும்" என்று தனக்குள் எண்ணினான். முதலியார் பத்மவல்லியைப்பற்றிச் சொல்லும்போது சுந்தரனுக்கு மனம் பூரித்து ஆநந்தமயமாய் மாறியது. அவன் அவைகளை யெல்லாம் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் பேசத்தொடங்கி "பெரியீர்! இவைகளை எல்லாம் கேட்க மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இவைகளைப் பொறுப்பது வெகு கஷ்டந்

தான். என்ன செய்யலாம்? தங்களுடைய மேன்மையான குணத்திற்கு இவ்வித சங்கடம் ஏற்படுவது மிகவும் விசனிக்கத்தக்கதே. தந்தையின் குணத்தைப்போல் தனயனிருப்பான் என்று கூறுகிறார்களேயன்றி அவ்வாறு அமைவது துர்லபமே. இவை எல்லாம் குறித்து வருந்துவதென்றால் முடிவென்பதேயிராது. எல்லாவற்றையும் சகஜமாகத்தா னனுபவிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் கடவுள்தானிருக்கிறார். அவர் விட்ட வழி எனவிருப்பதைவிட நம்மால் என்ன செய்யக் கூடும்? என்று கூறிகொண்டே இருக்கையில் முதலியார் பேசத் தொடங்கி "ஐயா! நாங்கள் கடவுளை நினைக்காமலும் பஜிக்காமலும் ஒருகணமேனும் இருப்பதேயில்லை. சென்ற வெள்ளிக் கிழமை யன்றுகூட நான் திருவல்லிக்கேணிக்குச் சென்று என் மனக் குறைதீரக் கதறினேன். ஸ்ரீபார்த்தஸாரதியையும், அம்மன் வேதவல்லியையும், நரஸிம்மஸ்வாமியையும் பிரார்த்தித்துத் தான் வந்தேன். நான் அடிக்கடி கோவிலுக்குச் செல்லாமல் இருப்பதேயில்லை. நான் எத்தனையோ கோயில்களுக்குச் சென்றிருக்கிறேன். திருவல்லிக் கேணிக் கோயிலின் பெருமாளின் திவ்விய சேவையைப்போலும் அந்தக்கோயிலின் அர்ச்சகர்கள் சமர்ப்பிக்கும் சாற்றுப்படியைப்போலும் அவர்கள் எல்லோரும் ஒருவரைப்போ லொருவர் பகவானிடத்தில் பக்திசிரத்தையோடு தொண்டு புரிந்து வித்தியாசமின்றி மனிதர்களைக் கவனித்து சேவை சாதிக்கச்செய்வதும், இன்னுமற்ற எல்லாவிதத்திலும் சிறந்து விளங்குவதும் வேறெங்குமில்லை என எனக்கு தோன்றுகின்றது. அந்த பட்டர்கள் ஒவ்வொரு சாற்றுப்படி சமர்ப்பிப்பதன் மகிமையோ! அல்லது அந்த பகவானது மகிமையோ வறியேன். பகல் பத்து திருவிழாக்காலத்தில் ஒன்பதாவது தினத்தன்று முரளீகண்ணன் சாத்துப்படி சமர்ப்பிக்கின்றார்கள். ஆஹா! அன்று அந்தப் பார்த்தஸாரதியை ஸேவிக்க ஆயிரம் கண்கள் படைத்திருந்தாலும் போதாது. தேகம் அப்படியே பரவசமடைந்து மெய் மறந்துபோகின்றது. எல்லாமவன் மகிமைதான்" என்று கூறுகையில் சுந்தரன் இடையில் பேசத்தொடங்கி, "ஆஹா! நான் நேற்று இரவு கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்கே வேணுகோபாலன் திருக் கோலம் சமர்ப்பித்திருந்தார்கள். அந்தக் காட்சியைச் சேவிக்கையில் என்னையே நான் மறந்து விட்டேன். எந்தச் சமயம் எப்போது

சேவித்தாலும் அந்தப் பார்த்தஸாரதியின் ஸேவாம்ருதம் மாத்திரம் தெவிட்டாத தெள்ளமுதமென்றே தோன்றுகின்றது. இன்னும் மற்ற எல்லோருடைய சேவையும் அப்படித்தானிருக்கிறது. எந்தச் சமயம் யார் சென்றாலும் கருணையுடன் சேவைகொடுக்கும் கடவுள் திருவல்லிக்கேணியில் தான் விளங்குகிறார்'' என்று இவன் பேசிக் கொண்டிருக்கையில் பத்மவல்லி "அம்மா!'' என்று கூப்பிட்ட குரல் கேட்டு இருவரும் எழுந்து பத்மத்தருகில் சென்று என்னவேண்டுமென்று விசாரித்தார்கள். அவள் தனக்குப் பசிக்கின்றதென்று கூறினாள். உடனே பக்கத்திலிருந்த தர்மாஸ் க்ளாஸிலிருந்து சிறிதளவு கஞ்சியைக் கொட்டிச் சுந்தரன் கொடுத்தான். பத்மம் அதை மெல்லப் பருகினாள். லக்ஷ்மியம்மாள் தாங்கமாட்டாத மனக்கலக்கத்தினால் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டாள். இந்திராணியும் இன்னும் மற்றவர்களும் நித்திரையி லாழ்ந்திருந்தார்கள். பிறகு முதலியார் சுந்தரனைச் சற்று நித்திரை செய்யும்படிக்குக் கூறினார். அவனுக்கு நித்திரை செய்ய முடிய வில்லை. பத்மம் ஜுரத்தின் வேகத்தால் சற்று முனகிக்கொண்டே படுத்திருந்தாள். முதலியாரும் சுந்தரனும் அந்த அறையிலேயே தனித்தனி பலகையில் படுத்தார்கள். சுந்தரனுக்குக் கொஞ்சமும் நித்திரையின் தோற்றமே உண்டாகவில்லை. அவன் முந்திய நாள் முற்றும் விழித்திருந்தானல்லவா? அப்படியிருந்தும் அவனுக்கு நித்திரை பிடிக்கவில்லை. மனத்தில் அவ்வளவு வருத்தமேலிட்டிருந்தது. அவன் பலவாறு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியவண்ணம் படுத்திருந்தான்.

'ஆஹா! நாம் நேற்றிரவெல்லாம், பட்ட பாடென்ன? அவுடதங் கொடுத்தபடி நாம் அந்த அணங்கின் பக்கலிலேயே இருக்கும்படியான பாக்கியம் நமக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து இருக்கும் தருணம் அந்தப் பைங்கிளிக்கு இந்த ஆபத்து மீண்டும் வந்துவிட்டதே! அந்தோ! ஜுரமோ பலமாக வந்துவிட்டது. அறற்றலும் பிதற்றலும் அதிகமாக விருக்கின்றன. ஆஹா! அவளுக்குக் காலையில் நன்றாகத் தெளிந்ததை நோக்கிச்சந்தோஷப்பட்ட என் மனம் இப்போது உருகுகின்றதே. ஈசா! அவள்படும் கஷ்டத்தைக் கண்டு சகிக்க முடியவில்லையே. அவளருகிலேயே உட்கார்ந்திருப்போமென்றாலும் மனம் சற்றுக் கூசுகின்றது. அவள் தான் என்ன எண்

னுவாளோ, அல்லது இன்னும் மற்றவர்கள்தான் என்ன நினைப்பார் களோ? என்று வருத்தமா யிருக்கின்றது. அவளுடைய தேகத்தில் என்னவிதமான பாதை செய்கின்றதோ தெரியவில்லை. அதைத் தாங்காமல் அவள் அலற்றுகின்றாள். காலம் இரவாகையினால் நாம் அடிக்கடி என்ன செய்கின்றதென்பதை விசாரித்துக் கேட்டறிந்து சிகிச்சை செய்யலா மென்பதற்கும் சற்று யோசிக்கவேண்டியதா யிருக் கிறது. என்றாலும் காரணமறிந்து வேதனையைத் தீர்க்காவிட்டால் நாம பக்கத்திலிருந்து என்ன பயன்? இவ்வமயம் நாம் அவற்றை யெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தால் நன்றாக விராது; நாம் எழுந்து விசாரிப்பதே உசிதம்" என வெண்ணி எழுந்தான். அப் போது இரவு சுமார் ஒருமணி யிருக்கலாம். நாஸூம் பத்மத்தின் பக்கத்தில் ஆடிவிழுந்துகொண்டே சாய்வான நாற்காலியில் சாய்ந் திருந்தாள். சுந்தரன் பத்மத்தருகில் சென்று வெகுமரியாதையோடும் உள்ளார்ந்த பிரியத்தினால் உண்டாகப்பட்ட பரிதாபத்துடனும் அவள் படும் பாதையைக்கண்டு சகியாமல் உள்ளம் உருகியும் கண்களில் தனது இன்ப துன்பங்களின் குறியாகப்பெருகிய அருவியைத்துடைத்தவாறும் பேசத் தொடங்கி, "அம்மணி! தங்களின் தேகத்தில்யாது பாதைசெய் கின்றது? அதனை அறிவித்தால் அதற்கான முறைப்படி சிகிச்சை செய் யத்தயாராக விருக்கின்றேன். தாங்கள் தேக பாதையைத் தாங்காமல் தவிப்பதைக் காணச்சகியாமல் நான் கேட்கின்றேன். தாங்கள் சங்கோ சப்படாமல் உரைப்பீர்களென எதிர்பார்க்கிறேன்" என்று கூறினான்.

தனது தேகபாதையின் சகிக்கக்கூடாத உபத்திரவத்தால் தன்னை யறியாமல் முனகுக்கொண்டிருந்த பத்மம், சுந்தரன் தனதரு கில் வந்து வெகு பக்ஷத்துடன் விசாரித்ததைக் கேட்டதனால் அவள் மனத்தில் ஒருவிதமான கனிந்த ப்ரேமையும், லஜ்ஜையும், ஏற்பட்டுத் தான் முனகுவதைச் சற்று நிறுத்தி மெல்லப் பேசத்தொடங்கி வெகு இனிமையாகவும், இன்பமாகவும் "ஐயா! தாங்கள் என் பொருட்டாகப் படும்ச்ரமத்திற்கு நான்என்னசெய்யப்போகிறேன். வாய்ப்பேச்சுக்கூடப் பேசத்தெரியவில்லை. இன்னுமா தாங்கள் தூங்காமல்விழித்திருக்கின்றீர் கள்? அடடா! இப்போது நடுநிசிநேரமிருக்கலாம்போலவிருக்கின்றதே! அந்த அம்மாளையும் நான் பலவந்தமாக நித்திரை செய்யும்படிக்குக் கூறியும் அந்தம்மாள் இன்னும் விழித்திருக்கின்றார்கள். தாங்கள்

படுத்ததை எண்ணிச் சற்று நித்திரை செய்யட்டுமென நான் நினைத்தேன். அதற்குள் தாங்கள் நித்திரையே கொள்ளாமல் எழுந்து வந்துவிட்டீர்களே ! நானும் என்னாலான வரையில் பிறருக்கு நித்திரை பங்கம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அனற்றாமலிருக்க வேண்டுமென முயன்றும், அது பயனற்றுத் தங்களை முற்றிலும் நித்திரையே கொள்ளாவாறு செய்துவிட்டதே ! ஐயோ ! சே ! என்ன பேதமைத்தனம் செய்துவிட்டேன்." என்று அவள் கூறிக்கொண்டே வருகையில் சுந்தரன் இடைமறுத்து "அம்மணி ! எங்களைப் போன்ற பரோபகாரார்த்தமான தொழிலை மேற்கொண்டுள்ள யாவருக்கும் நித்திரை பங்கமோ, ஆகாரக் குறைவோ ஏற்படுவது சகஜந்தான்; அதில் சற்றும் குறையே இல்லை. அதற்காகத் தாங்கள் இப்போதிய தேகநிலைமையில் வருந்துவதுகூடாது. தங்கள் பாதையை நிவர்த்திக்கும்பொருட்டு யானிங்குவந்தேனேயன்றிச்சகஜமாக உண்டு உறங்குவதற்காக நான் வந்திலேனே. தாங்கள் தேக பாதையின்றிச் சுகமாக நித்திரை செய்யுங் காலையில் நான் விழித்திருக்கப் போகிறேனு, அதொன்றுமில்லை. இவையெல்லாம் எனக்கு அனுபவத்தில் பழகிவிட்டன. அதைக் குறித்துக் கவலையே வேண்டாம். தாங்கள் தயைசெய்து தேகத்தில் என்னசெய்கின்றதென்பதைக் கூறுங்கள்" என்று வெகு உருக்கமாகக் கேட்டான். இதைக்கேட்ட நர்ஸ் பேசத்தொடங்கி, "தாயே! அப்போதே யான் கேட்டதற்குப் பேசாதிருந்துவிட்டீர்கள். தாங்கள் கஷ்டப்பட அதைக் கண்டு பிறர் எவ்வாறு சகித்துக்கொண்டிருப்பது ? அதை நிவர்த்திக்கவென்றே நாங்கள் ஆயத்தமாயிருக்க தாங்கள் எங்களை நித்திரை செய்யும்படி கூறினும் எமக்கு நித்திரை கொள்ளுமா ! தங்கள் தேகத்தில் என்ன செய்கின்றதென்பதைக் கூறுங்கள்" என்றாள். இதைக் கேட்ட பத்மம் "ஐயோ! என்னால் எத்தனை பெயருக்குக் கஷ்டம் ஏற்படுகின்றது. ஹா! என் தேக முற்றும் ரணமாக இசிக்கின்றதே! அதனால் தான் என்னை மீறிய அனற்றல் வந்து விடுகின்றது. என்னால் கூடுமான வரையில் சகித்துப் பார்த்தும் பொறுக்கக் கூடவில்லையே!" என்று பரிதாபமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட சுந்தரன், நர்ஸ் இருவரும் மனவருத்தத்துடன் பத்மாவை நோக்கினார்கள். சுந்தரன் நர்ஸைப் பார்த்துக் கும்

மட்டிமையைப் பற்றவிடும்படி சொன்னான். தான் இரண்டு ஒட்டுப் பாளங்களைக் கொண்டுவந்து அதைத்தணலிலிட்டு நன்றாகக் காய்ச்சி அதை ஒரு துணியில் சுற்றிக்கொண்டு நர்ஸிடம் கொடுத்து பத்மாவின் தேகத்தில் ஒற்றிடம் கொடுக்கச் செய்தான். தான் ஒட்டுப்பாளங்களைக் காய்ச்சி துணியில் சுற்றிக் கொடுப்பதும் நர்ஸை ஒற்றச் செய்வதுமாக சுமார் ஒரு மணி நேரமிருந்தான்; பிறகு ஏதோ ஒரு தைலத்தை தேகத்தில் தேய்க்கச் செய்தான். பிறகு நான்குமணி சுமாருக்கு பத்மம் நன்றாக நித்திரையிலாழ்ந்தாள். அதன்மேல் சுந்தரனும், நர்ஸும் சற்றுப் படுத்தார்கள். இரண்டு நாளாக சுந்தரன் சற்றேனும் நித்திரை கொள்ளாமல் மனோவேதனையுடன் நோயாளியிடத்தில் அதிக ஜாக்கிரதையாயிருந்து தன் வேலையில் கண்ணாகக் கவனித்து வந்தான்; அப்போது குளிர்ந்த காற்று சிலீர் சிலீர் என்று வீசினமையால் அவன் தன்னை மறந்து சற்று நித்திரை செய்யத்தொடங்கினான்.

உலகத்திலுள்ள சகல பிராணிகளும் தத்தம் நிலையழிந்து இரவு முதல் மூத்தவள் வயப்பட்டுக்கிடப்பதைத் தடுத்து எல்லோரையும் தட்டி எழுப்பி தத்தமலுவல்களைச் செவ்வனே செய்து தமது குடும்பத்தைக் கவனிக்கும்பொருட்டுத் தூண்டுபவன்போல ஆதித்தன் உதயமாயினான். மீண்டும், கொடியதான இருளென்னும் கள்ளனை யோட்டிவிட்டு, அவ்விருளின்காலத்தில் அவஸ்தைப்பட்ட நோயாளிகளையும் இரவுமுற்றும் வாடி வதங்கித் துவண்டு கிடக்கும் அம்போருகத்தையும் களிக்கச்செய்யும் கருத்துடன் வெகு விரைவாக அருணன் சாரதியம் செய்யத் தன் பரிவாரங்களாகிய கிரணங்களுடன் 'இதோ வந்துவிட்டேன் வந்துவிட்டேன்' என்று கூறிப்பறைசாற்றுவது போல தனது தேக காந்தியை முன்னால் பிரகாசிக்கச் செய்துகொண்டே உதயமாயினான். மற்றும் மக்களைப் பெற்ற மாதாபிதாக்கள் தமதருமை மக்களுக்கு விவாகம் முதலிய நல்ல சுபகாரியங்களைக் குறித்து யோசித்துக்கொண்டோ அல்லது சம்பாஷித்துக்கொண்டோ இருக்கும் சமயத்தில் அவச்சொல்லைச் சொல்லக்கூடிய ஆந்தை ஏதேனும் அசுபமான சொல்லைச் சொல்லி மனத்திற்கு வருத்தத்தை யுண்டாக்காமலிருக்கும் பொருட்டு ஆந்தைக்குத் தூக்

கத்தை யுண்டாக்கவேண்டும் என்கிற கருத்துடன் பரிதி உதயமானான். உத்தம பத்தினியாகவும் நல்ல குல ஸ்திரீயாகவுமுள்ள சில கற்பரசிகளைக் கெடுத்து அந்தப் பாவமூட்டையைச் சுமந்து செல்லவேண்டுமென்ற காதக எண்ணமுடைய சில வஞ்சகக் கிராதகப் பாவிகளின் எண்ணம் பலிக்கவிடாமலும் அவ்வுத்தமிகளைக் காக்கும்பொருட்டு முன்னதாக அத்துஷ்க்ருத்யங்களுக்கு உடந்தையாயிருக்கும் அக்கொடிய இருளைத் தனது பரிவாரங்களால் விரட்டியடித்து அவ்வுத்தமிகளுக்கு நேரவிருந்த ஆபத்தைத் தவிர்க்க வந்தவன்போல் சூரியன் உதயமாயினான். இரண்டுநாளாக மிகவும் கஷ்டப்பட்டுச் சோர்ந்து நித்திரை புரிபவனாகிய சுந்தரனை, நாம் சீக்கிரத்தில் எழுப்புவது கூடாதென்னும் நோக்கத்துடன் மேற்கூறிய கண்ணியம் பொருந்திய பானு, அன்று தனது தீக்ஷண்யத்தை வெளிக்கிளப்பாமல் சற்று குளிர்ந்தகாற்றும் மப்பும் மந்தாரமுமாகவுள்ள வானத்தில் மறைந்து மறைந்தே தோன்றினான். முதலியார் முன்னிரவில் விழித்திருந்து பின்னிரவில் அயர்ந்து துயின்றுவிட்டார். உதயமானதும் அவர் எழுந்துவிட்டார். எழுந்தவர் நேரே பத்மவல்லி யருகில்சென்று பார்த்தார். அவள் அயர்ந்து நித்திரை செய்வதையும் நர்ஸும் துயில்வதையும் கண்டு பத்மாவின் கையைத் தொட்டுப் பார்த்தார். ஜுரம் சற்றுத் தணிவடைந்திருப்பதைக்கண்டு மகிழ்ந்தவராய் அவ்விடத்தைவிட்டுச் சென்று தமது காலைக்கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு பகவானை ஸ்தோத்திரம் செய்துவிட்டுத் தமதறையில் வந்தமர்ந்தார். அவர் மனமுற்றும் முதல் நாள் செல்லப்பாவை ஜாமீனில் அழைத்துவரச்சென்றவர்கள் இன்னும் ஒருவிததகவலும் தெரிக்கவில்லையே, இன்னும்வராமைக்குஎன்னகாரணம் என்பதும் தெரியவில்லையே! என்ற எண்ணத்திலேயேசென்று போராடிக்கொண்டிருந்தது. அவர் அதை அடக்கிக்கொண்டு சுந்தரன் எழுந்துவிட்டானா என்று போய்க்கவனித்தார். அவன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்ததைக் கண்டு பேசாமல் திரும்பி வந்துவிட்டார். ஐயோ, பாவம்! நேற்றுமுற்றும் வெகு கஷ்டப்பட்டு இரவும் கண் விழித்ததனால் இப்போதுதான் சற்றுத் தூங்குகின்றார்போல இருக்கிறது. அவர் நேற்றுமுற்றும் சரியான ஆகாரமே கொள்ளவில்லை. இன்று காலை போஜனத்தையாகிலும் நன்றாகத் தயாரிக்கச்

சொல்லவேண்டும்'' என்று எண்ணியவாறு சமையல்காரிபிடம் பூரி, ரவை உப்புமாவு, சேமியா அல்வா, இவற்றைச் செய்யும்படிக்கு உத்தரவிட்டுத் தமது அறைக்குச் சென்றார். இதற்குள்ளாக இங்கிராணி, லக்ஷ்மியம்மாள், நர்ஸ் எல்லோரும் எழுந்தார்கள். ஏழுமணி சுமாருக்கு பத்மவல்லியும் விழித்துக்கொண்டாள். அப்போது அவளுடைய தேகமுற்றும் வெயர்வை வெள்ளமாக வழிந்தோடிற்று; ஜுரம் நன்முகவிட்டதற்கு அதுவே அடையாளமாயிற்று. நர்ஸ் பத்மத்தின் ஆடை, படுக்கை முதலியவற்றை மாற்றி வைத்தாள். பத்மம் தந்த சுத்தி செய்துகொண்டு தேகமுற்றும் வெந்நீரினல் துடைத்துக்கொண்டு படுத்தாள். அவள் எண்ணமெல்லாம் சுந்தரன் மீதிலேயேசென்றிருந்தது. இரவில் தான்பட்ட பாதையைக்கண்டு சகியாமல் அதற்கு உபசாரத்துடன் சிகிச்சைசெய்து தனது வலியை அவரது புஜவலிமையால் பறக்கடித்துத் தனது துன்பமகற்றி நித்திரை செய்யும்படி செய்ததையும், அதற்கு முன்னுல் தன்னைக் கடலிலிருந்து காப்பாற்றியதையும், தனக்கு வெகு சிரத்தையுடன் அருகிலிருந்து அவுடதம் முதலியன கொடுத்துப் பாதுகாத்து வந்ததையும் எண்ண எண்ண அவள் மனத்தில் ஒருவிதமான எழுச்சியுண்டாய் அவரிடத்தில் தன்னைமீறிய பற்று ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. ''அவர் இரவில் பிறகாகிலும் நித்திரை செய்தாரோ அல்லது விழித்தே யிருந்தாரோ தெரியவில்லையே! ஐயோ! நம்மொருத்தியால் எத்தனை பெயருக்குத்துன்பம்? ஹா! நமது ஜன்மம் எதற்கு?'' என்று தனக்குள் எண்ணியவண்ணம் படுத்திருந்தாள். சுமார் எட்டு மணிக்குச் சுந்தரன் கண்விழித்து எழுந்தான். அவன் தன்னைமீறித் துயின்றுவிட்டதை அப்போதே தெரிந்துகொண்டான். அப்பொழுது சற்று மப்புமந்தாரமாகப் பொழுதிருந்தபோதிலும் நிரம்பவும் நேரமாய்விட்டதாகச் சுந்தரன் நொடியிலறிந்துகொண்டான். அவன் மனம் பதறியது. ''ஹா! நாம் பிறருடைய வீட்டில் நோயாளியைக் கவனிக்க வந்தவிடத்தில் இவ்விதம் மட்டித்தனமாகவும் மூதேவித்தனமாகவும் தூங்கிவிட்டோமே! நாம் இத்தனைநேரம் துயின்றதைப்பற்றி யார் என்ன நினைப்பார்களோ! அடடா! என்ன கேவலம் மதியீனமாக இந்நேரம் தூங்கிவிட்டோம். நோயாளி எவ்விதமானுளோ? காலை மருந்துகள் கொடுக்கும் நேரமும் கடந்துவிட்டதே'' என்று பலவாருகச்

சிந்தித்துக்கொண்டே படுக்கையைவிட்டு எழுந்து கைகால், தந்தம் முத லியவற்றைச் சுத்திசெய்துகொண்டு வருகையில், எதிரில் முதலியாரைக் கண்டான். தான் அதிகநேரம் நித்திரை செய்ததைக்கண்ட முதலியார் தன்னைப்பற்றி என்ன நினைப்பாரோ என்று அவரைக்கண்டதும் லஜ் ஜையினல் அஞ்சியவாறு அவன்முதலியாரைப்பார்த்து சிரித்தவண்ணம் "உலகத்தில் சுலபமாகத் தன்வயப்படுத்திக்கொள்ளும் சக்தி வாய்ந் துள்ள வஸ்து நித்திரை யொன்றுதான். மூதேவித்தூக்கத்திற்கு நான் இத்தனை நேரம் அடிமையாய்விட்டதை எண்ண எனக்கே வெட்கமா யிருக்கின்றது. உதயமானதே அறியாமல் தூங்கிவிட்டேன். தாங்க ளாகிலும் சற்று எழுப்பியிருக்கலாகாதா?" என்றான்.

இதைக்கேட்ட முதலியார் வெகு அன்புடன் பேசத்தொடங்கி "அடடா! தாங்கள் இதற்குள்ளாகவா எழுந்துவிட்டீர்கள்? நான் தங்களை எழுப்பலாகாது என்ற கருத்துடன்தான் பேசாதிருந்துவிட் டேன். தாங்கள் நேற்றுமுற்றும் பட்ட ச்ரமத்திற்கு இந்தத் தூக்கம் தூங்கியதை ஒருபெரிய ப்ரமாதமாகவெண்ணி லஜ்ஜை யோடு பேசுகின்றீர்களே! தாங்கள் பட்டுள்ள சிரமம் பரிகார மாகவும், தங்கள்தேகம் சுகமடைவதற்கும் நான்கு நாட்களா வது செல்லுமே. விடியற்காலம் நான்குமணி வரையில் தாங்கள் நித்திரை செய்யவில்லை என்பதை நர்ஸு மூலமாயறிந்தேன். நான்கு மணிக்குமேல் படுத்த தங்களுக்கு இந்த நேரம் ஒருநேரமா? இன்னும் சற்றுநேரமாகிலும் நிம்மதியாகத் தாங்கள் தூங்க வேண்டு மென்று நான் எண்ணியிருந்தேனே. இதற்குள்ளாகத் தாங்கள்எழுந்து விட்டீர்களே! சரி காலை போஜனத்திற்கு வாருங்கள்." என்று அழைத் தார். அதைக்கேட்ட சுந்தரன் "தங்கள் குழந்தைக்குக் காலை மருந்து கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டே சிரித்த முகத் துடன்சுறுசுறுப்பாகப்பத்மவல்லியின் அறைக்குச்சென்றான். பத்மவல்லி அப்போது கண்விழித்துக்கொண்டு தெளிவான முகத்துடன் படுத் திருப்பதைக்கண்ட சுந்தரன் மட்டற்ற மகிழ்ச்சியோடு அருகிற்சென்று வெகு இன்பமாகவும், மரியாதையாகவும், கனிந்த பார்வையோடும் பேசத்தொடங்கி "அம்மணி! இப்போது தங்களுக்கு உடம்பு எவ்வித மிருக்கின்றது? வலி எல்லாம் சற்று தேவலையா!" என்று கேட்டுக் கொண்டே தன்னைமீறிய மகிழ்ச்சியோடு பத்மத்தின் காத்தைப்பிடித் துப் பார்க்கத்தொடங்கினன். "ஆஹா! இந்த வைத்திய முறை

யின் உதவியாலல்லவா இந்த அருமையான கரத்தைத் தீண்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கடைசல்பிடித்த தந்தத்தினால் செய்யப்பட்ட கரமோ இது! ஆம். அப்படித்தானிருக்க வேண்டும். தந்தம் பார்வைக்கு அழகேயன்றி ஸ்பரிசிப்பதற்குக் கடினமாயிருப்பது. அந்த தந்தமும் இவளது கரத்தின் மகிமையால் இலவம் பஞ்சைவிட அதிகமான மிருதுத்தன்மையை அமைந்திருக்கின்றதே. ஆஹா! அத்தகைய இனிமையும் மேன்மையும் வாய்ந்த இக்கரத்தைத் தீண்டும் பாக்கியம் நமக்குக் கிடைத்ததே.'' என்று மனதிற்குள் இமைப்பொழுதில் எண்ணி மகிழ்ந்த வண்ணம் நாடியைப்பார்த்தான். ஜுரம் அடியோடு நின்றிருப்பதையறிந்து அளவற்ற மகிழ்ச்சியை யடைந்தான்.

சுந்தரன் கேட்டகேள்விக்கு பத்மம் மகிழ்ச்சியோடு பதில் கூறத் தொடங்கி "என்தேக வலியையெல்லாம் தாங்கள் இரவே ஓட்டிவிட்டீர்களே! ஜுரமும் இப்போது குறைந்திருக்கின்றதாகவே தெரிகின்றது. தாங்கள் ஐந்து மணிக்குப் படுத்தவர்கள் இதற்குள்ளாகவா எழுந்துவிட்டீர்கள்?'' என்றாள்.

இதைக் கேட்ட சுந்தரன் ஆனந்தம் மேலிட்டவனாய்ப் பேசத் தொடங்கி "ஆஹா! நான் இத்தனைநேரம் நித்திரை செய்துவிட்டதை எண்ணி மிகவும் வருத்தமுற்றவனாகி விருக்கிறேன். இத்தனை நேரம் நித்திரை செய்தது போதாதா? தங்களுடைய தேகபாதை நீங்கி ஜுரம் விட்டிருப்பதை நோக்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. "இதோ இந்த மருந்தைச் சாப்பிடுங்கள்'' என்று மருந்தைக் கொடுத்தான். பத்மம் அதை வாங்கி அருந்தினாள். உடனே லக்ஷ்மியம்மாள் கோகோவை ஒரு கோப்பையில் கொண்டுவந்து பத்மத்திற்குக் கொடுத்துச் சிறிதுசிறிதாய்ப் பருகவைத்தாள். முதலியார் சுந்தரனை அழைத்துக்கொண்டு காலை போஜனம் செய்யச்சென்றார். அவர் மனத்திலிருக்கும் துயரத்தினால் அவருக்குக் காலையில் எதுவும் புசிக்கப் பிடிக்கவில்லை என்றாலும் சுந்தரன் சாப்பிடும்பொருட்டு மரியாதைக்குத்தான் சாப்பிடாமல் இருப்பது அழகல்ல என்று எண்ணி அவரும் உட்கார்ந்தார். இரண்டு வெள்ளித் தாம்பாளங்களில் பூரி, அல்வா, உப்புமாவு மூன்றும் கொணர்ந்து வைக்கப்பட்டன. வெள்ளி கூஜாவில் பாலும் நான்கு டம்ளர்களும் கொணர்ந்து வைக்கப்பட்டன. பிறகு இருவரும் கைசுத்தி செய்துகொண்டு புசிக்கத் தொடங்கினார்கள்.

132834

முதலியார்:—குழந்தைக்கு ஜுரம் நன்றாக விட்டுவிட்டதா?

சுந்தரன்:—இப்பொழுது சிறிதுகூட ஜுரமே இல்லை. நன்றாக விட்டுவிட்டது. ராத்திரிதான் தேகத்தில் வலி அதிக பாதையாக விருந்ததாம். இப்போது அதுவும் நீங்கிவிட்டதாம். எல்லாம் ஸ்ரீ பார்த்தசாரதி கிருபைதான்.

முதலியார்:-அவர் கிருபையன்றி எதுதானிருக்கின்றது? என்னப்பன் பார்த்தஸாரதியின் கருணைகடாக்ஷத்தினால்தான் கேவலம் மஹா பாவியாகிய எனக்குத் தங்களுடைய நேசம் கிடைத்தது. ஆஹா! உலகத்தில் பிள்ளைகளாகப் பிறந்தால் தங்களைப் போலல்லவா பிறக்க வேண்டும்? எதற்கு அணில்பிள்ளை, கீரிப்பிள்ளை இவைகளுக்குச் சமமாகப் பிறப்பது? ஆனால், அணில்பிள்ளைகூட ஸ்ரீராமபிரானுக்குச் சேதுவைக் கட்டும்போது மண்ணைக் கொண்டுவந்து தனக்கு சக்தியானவரையில் கொட்டியதாக ராமாயணம் கூறக் கேட்டிருக்கிறோம். அதற்குள்ள உயர்வான பதவிகூட இல்லாமலிருக்கும் பிள்ளைகள் எதற்குப் பிறப்பது? அப்பா! சுந்தரம்! நான் உன்னைப் பெயரிட்டு ஸ்வாதீனமாயழைப்பதனால் நீ வருத்தமடையமாட்டாய் என்று நினைக்கின்றேன். என் உள்ளம் குளிர, என் பஞ்சபூதசாக்ஷியாக ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாளறிய அவர் கிருபையின் மகிமையால் உன்னை நான் கண்டதுமுதல் உன்னிடத்தில் எனக்கு என்னைமீறிய வாஞ்சைவந்து சூழ்ந்துகொண்டுவிட்டது. உன்னை என்னுடைய செல்லப்பாவைப் போலவே என் மனம் எண்ணுகின்றது. உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க என்னுள்ளம் ஆநந்த பரவசமாகிவிடுகின்றது. அப்பா! சுந்தரம்! உன்னுடைய குணமும், உன்னுடைய நன்னடக்கையும என்னை உனக்கு அடிமை போலாக்கி விட்டன. நேற்று இரவு முற்றும் என் மனம் என்னென்னவோ பெரிய பெரிய யோசனையெல்லாம் செய்யத் தொடங்கிவிட்டது. அவைகளை யெல்லாம் என்னப்பன் எவ்விதம் கருணைகூர்ந்து முடித்துவைக்கப் போகிறாரோ தெரியவில்லை. இப்போதிருக்கும் நிலைமையில் உன்னை விட்டு ஒரு வினாடிகூடப் பிரிந்திருக்க முடியாதென்பதில் என்மனம் உறுதிகொண்டிருக்கிறது. உன்னை என்னுடைய சொந்தப்பிள்ளைபோலவே நான் தீர்மானித்துவிட்டேன். எனக்கு ஈசன் ஓர் ஆண் பிள்ளையைக் கொடுத்தும் அவனால் எனக்கு சந்தோஷமேற்படாமல் போய்விட்டது. நீ தான்

எனக்கு இனி மருமகன். என் மனப்பூர்வமாகக் கூறுகின்றேன். அதற்கு இருவகைக் கருத்திருக்கின்றது. என் செல்லப்பாவிற்கு அடுத்த மருமகன் நீயே. கடவுளின் அனுக்ரகத்தினால் என்னருமை பத்மவல்லியை மணக்கும் மருமகனாகவும் கூடியசீக்கிரத்திலாகவேண்டு மென என் மனத்தில் சதா குடிகொண்டிருக்கும் பார்த்தஸாரதிப்பெரு மாளை வேண்டுகிறேன்" என்று முதலியார் சொல்லிக்கொண்டே வரும் போது சுந்தரத்தின் மனத்தில் இன்னதென்று சொல்லவறியாத மகிழ்ச்சியும் ஆனந்தமும் மேலிட்டு விட்டன. கோடை வெய்யிலில் நடந்து அவஸ்தைப்படும் ஒருவனுக்குத் தாகத்தால் நாவறண்டு தவிக் கும் தருணம் தண்ணீரைச் செம்புடன் கொடுத்துப் பருகச்செய்தால் அவன்மனம் எவ்விதம் மகிழுமோ அதுபோல் சுந்தரனுடைய மனமும் மகிழ்ந்தது. அவன் அதை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் அடக்கிக் கொண்டு வெகு வணக்கத்துடன் பேசத்தொடங்கி "அன்பார்ந்த பெரியீர்! எதற்கும் உதவாத அசேதனனாகிய என்னையொரு பொருட் படுத்தித் தாங்கள் இத்தகைய பெரிய வார்த்தைகளை யெல்லாம் சொல்லலாகுமா? நான் கேவலம் அடிமைத் தொழிலில் கூலிவாங்கி வேலை செய்யவல்லவா வந்தவன்? என்னைப் பார்த்துத் தாங்கள் திரு மகனுக்கு ஒப்பாகக் கூறுவது பொருந்துமா? தாங்கள் ஓர் ஏழையைப் பார்த்து இவ்வாறு புகழ்ந்து கூறுவது தங்களின் பெருந்தன்மையை யும் தங்களுடைய அருமையான குணவிசேஷத்தையும் காட்டுகின் றதேயன்றி எனக்கு அவைகளெல்லாம் சிறிதும் தகா" என்று கூறிக்கொண்டேவருகையில் முதலியார் இடைமறுத்து "அப்பா! சுந் தரம்! நீ கூறியது முற்றிலும் ஒருவிதத்தில் நிஜமே. உலகத்தில் எவ ருக்கும் கிடைத்தற்கரிதான சகலமான நல்ல அம்சங்களையும் ஆபரண மாகப் பூண்டுள்ள மாணிக்கமாகிய உன்னைக் கேவலம் மிலேச்சனான அந்தச் செல்லப்பாவுக்கு ஸமதையாக நான் கூறுவது பிசகுதான். அத் தகைய அனிஷ்டத்தைப் பெற்ற எனக்கு குமாரனாக உன்னைக் கூறு வது சற்றும் ஒவ்வாததுதான். என்றாலும், உன்னை என்மனம் முற் றிலும் சுற்றிவளைத்து இருத்திக்கொண்டு விட்டது. என் குலத் திற்கே விளக்கை ஏற்றிவைத்த உத்தமன் நீயன்றோ? செல்லப்பாவின் கதிதான் அங்ஙனமிருக்க எனதருமைப் பத்மத்தின் உயிர் கடலில் நீங்கியிருக்குமாயின் எங்களுக்கு இனிப் பிரபஞ்சத்தில் வேறு யாதுள்

ளது? அதோகதியாகப் போகவிருக்கும் எங்கள் குடியின் விளக்கை ஏற்றிவைத்த கோமான் நீ என்பதை என் தேகம் சாம்பலானு லும் மறக்குமா? அப்பா! சுந்தரம்! நீ ஏழை என்று கூறுவதைக் கேட்க எனக்கு வியப்பாகவிருக்கின்றது. பணம் எதற்குப் பிரயோஜன மப்பா? பணமிருந்தால் ஒருவன் பெட்டியிலிருக்கப் போகிறது. வீட் டுப் பெண்பிள்ளைகளின் தேகத்தில் நகைகளாக இருக்கப்போகின்றது. அது பிறருக்கு இப்படி உபயோகப்படுமா? அதை உபயோகப்படுத்த வும் மனம் வருமா? ஒரு பிச்சைக்காரனுக்கு கால் காசு கொடுப்பதற் குள் லக்ஷக்கணக்கில் பணமுள்ளவர்களின் கண் விழி பிதுங்கிவிடு கின்றது. அந்தப் பணமில்லாதவர்களிடம் தமது ஆகாரத்திற்குள்ள காலணவை பிச்சைக்காரனுக்குக் கொடுத்து விடவேண்டுமென்கிற எண்ணம் பூர்ணமாக இருக்கிறது பணமுள்ளவர்கள் தாம் சுகமாக உண் பதும் உடுப்பதும் மோட்டார் வைத்துக்கொள்வதும் அசையாமல் உட் கார்ந்து கொண்டுபணிமக்களைக் கொண்டுவேலை செய்வித்துக்கொள்வது மாகவிருக்கிறார்களேயன்றி அவர்களுடையபணம்பிறருடையசுகத்திற்கு உபயோகப்படுகிறதா? பணக்காரன் வீட்டு வேலையாள் நோயால் படுத் து விட்டதருணம் "ஐயா! எனக்கு வைத்தியச் செலவிற்குக் கொஞ்சம் ரூபாய் வேண்டும், கொடுங்கள்; நான் குணமானபிறகு என் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம்" என்று அவன் ஆபத்தான தருவாயில் தன் எஜமானனைக் கேட்டால் எஜமானன் அவனுக்கு மனங்கோணுமல் காலணு கொடுப்பானு? அல்லது இத்தனைநாள் தனக்கு உழைத்தவனென் கிற நன்றியாவது அவனுக்கு உண்டாகுமா? "அவனுக்குப் பணத்தைக் கொடுத்தால் பிறகு அவன் தேறி நமக்கு உழைத்துச் சம்பளத்தில் அந் தப்பணத்தைப் பிடித்துக் கொள்வதென்பது நடக்குமோ நடக்காதோ! அவன் பிழைக்காமல் இறந்துவிட்டால் என்ன செய்வது?" என்று பணத்திற்குக் கணக்கு கட்டிக்கொண்டு ஆபத்தென்பதையும் பாராமல், "நீ உடம்பு சரியில்லையென்பதை நேற்றே சொல்லி யனுப்பாமையால் நான் வேறு வேலைக்காரனை வைத்துக்கொண்டேன். சொல்லியனுப் பாத தப்பிதம் உன்னிடமிருக்கும்போது நீ என்னிடம் துணிந்து பணமும் கேட்க வருகிருயா?" என்று அதட்டி அனுப்பிவிடுகிறார்கள். அவைகளை நான் கண்டும் கேட்டுமிருக்கிறேன். பணம் பைபையாக கிடக்கிறவர்களை அண்டியுள்ளவர்களுக்காகிலும் அந்தப் பணம்

உதவுகின்றதா? பணம் நிறைந்திருந்தாலுங்கூட அதைச் செலவிடுவதற்குக் குணமும்கூட இருக்கவேண்டாமா? என்னைக் கேட்டால் பணத்திற்கு ஓர் உயர்வே கிடைக்காது என்றே கூறுவேன். இன்று பெரிய லக்ஷாதிபதியாக விருப்பவர்கள் நம்முடைய கண்முன்னாலேயே நாளை பிக்ஷாதிபதியாக ஆய்விடுகிறார்கள். குணமோ அப்படியல்ல. கோடி காலம் கழிந்துக்கூட மதிபோல ப்ரகாசிக்கக் கூடியது. பணத்திற்கும் குணத்திற்கும் எவ்வளவோ பேதமிருக்கின்றது. ஒரு மனிதனுடைய குணம் அவன் இறந்துபோன பின்னரும் அவனுடைய குடும்பத்திற்கு ஒருகோடி மரம்போல் நிற்கின்றது. பணமோ ஒருவன் ஆயுள்காலத்தில் சம்பாதித்து அவன் இருக்கும்போது அழிந்தும்போய்விடுகின்றது. எத்தனை பெயரை நாம் அம்மாதிரி கண்டதில்லை! மனிதருடைய குணமும் நன்னடத்தையும் தான் சாச்வதமேயன்றிப் பணம் ஒருபொருட்டேயல்ல. குணம், பணம் இரண்டும் பொருந்தியிருக்கும் புண்ணியவான்கள் எங்கோ நூற்றில் ஒருவர் தான். தன்னுடைய காலத்திலேயே முதலில் பணமில்லாமல் தவித்துப் பிறகு தன்னுடைய கையையும் மூளையுங்கொண்டு உழைத்துத் தன்னுடைய காலத்திலேயே அழியாப்புகழும் பெயரும் கீர்த்தியும் மணிபோல ஒலிக்கப் பணத்தையும் சம்பாதிக்கும் வீரர்களையும் நம் கண்ணால் காண்கிறோம். அவர்களுடைய உண்மையான உழைப்பால் கிடைத்த பணமும் பெயரும் என்றுமழியாப் பொருளாக விளங்கும். அதேபோல மனிதனுடைய குணமும் அழியாததாய் விளங்கக்கூடிய வஸ்து. அத்தகைய அருமையான குணமாகிய அம்ருதத்தையுடைய உன்னை ஏழை என்று கூறுவது சற்றும் பொருத்தமாகாது. தனது வேலைக்காரனுக்கோ அல்லது வேண்டிய மனிதர்களுக்கோ உபயோகப்படாத பணம் உன்னுடைய குணத்திற்கு ஈடாகுமா? எனக்குக்கூடத் தான் ஈசன் அளவற்ற செல்வத்தை யளித்திருக்கிறான். அதற்குத் தகுந்த மனமிருக்கவேண்டாமா? உன்னுடைய குணத்தை நீ தானம் செய்வதுபோல பணத்தைத் தானம்செய்ய மனம் யாருக்கும் வராது. பணத்தைவிட மேலான வஸ்து குணமேயன்றி வேறில்லை. என்னருமை சுந்தரம்! உன்னுடைய பெருமையை நீ அறிவது அரிதுதான். தாகத்தால் தவிப்பவனுக்குத் தண்ணீரின் அருமைதெரியும். சதா தண்ணீரில் மிதப்பவனுக்கு தண்ணீரின் அருமை எவ்வாறு தெரியும்?

சந்தன விருக்ஷத்தின் அடியில் நிற்கும் மனிதனுக்கு அதன் அருமையும் மணமும் தெரியவரும். அவ்விருக்ஷத்திற்கே அதன் மணம் தெரியுமா? அதேபோல உன்னுடைய குணத்தழகையும் உன்னுடைய சகலமான அம்சங்களையும் கண்டறிந்த எம்போல்பவர்க்கு உன்னுடைய பெருமை தெரியுமே யன்றி உன்னிடமுள்ள மணம் உனக்கே தெரியாதிருப்பது சகஜந்தான். அப்பா! சுந்தரம் நான் கடவுளறியச் சொல்லுகிறேன். நீ இனி இந்தவீட்டிலேயே இருக்கவேண்டும் என உன்னை வேண்டிக் கொள்கிறேன். என் துயரத்திற்கு நீயேதான் மருந்து. உனக்காக நீ தனியாக அறையொன்று வாடகைக்குவைத்துக்கொண்டு இருக்கவேண்டாம். இந்த பங்களா முற்றிலும் உன்னுடையதாகவே சுவாதீனமாக நினைத்துக்கொள்ள வேண்டுகிறேன். என்னைமீறிய பாசத்தினுல் தூண்டப்பட்டு நான் இதைத் தெரிவிக்கின்றேன். அப்பா! சுந்தரம்! நான் சொல்வதை நீ ஏளனமாக எண்ணக்கூடாது. என்னிஷ்டப்படி நீ நடப்பாயென்று நம்புகிறேன். உனக்கு வேண்டிய சகலமான சௌகரியங்களையும் நீ இங்கிருந்தே நடத்திக்கொள்ளலாம். உன்னுடைய வைத்தியரிடத்தில் போய்வருவதற்கு என் வண்டியையே உபயோகித்துக் கொள்ளலாம். உன் பெற்றோருக்கும் கடிதமெழுதி வரவழைத்து அவர்களுடைய சம்மதத்தின்படியே எல்லாவற்றையும் செய்யத்தயாராகவிருக்கிறேன். என் விஷயத்தில் இவ்வொன்றிற்காகிலும் கடவுள் கிருபைசெய்வாரா என்று ஏங்குகின்றேன். நேற்று இரவு முழுவதும் என்மனம் பலவிதமாக யோசித்துக்கொண்டே இருந்தது. என்னருமை பத்மவல்லியை உனக்கே தத்தம் செய்துவிடவேண்டும் என்று என்மனம் வெகு ஆவலுடன் எண்ணியது; அப்போதெல்லாம் நல்ல சகுனங்கள் ஆயின. இதோபார்; இப்போதும் மணியடிக்கின்றது. அந்தக்காரியத்தைப் பின்னுல் உன்பெற்றோர் வந்தபிறகு யோசித்துக் கொள்வோம். நீ இங்கிருப்பதற்கு என்ன சொல்கிறுய்" என்று வெகு வாஞ்சையோடு கேட்டார்.

இவர் செய்த பிரசங்கத்தைக்கேட்ட சுந்தரன் அளவற்ற பூரிப்பையும் கட்டுக்கடங்காத களிப்பையு மடைந்தவனுய்ப் பேசத் தொடங்கி, "தாங்கள் பிரேமை மிகுதியால் கூறுவதை நான் ஏளனமாகச் சற்றும் எண்ணவே மாட்டேன். ஆயினும் தங்களுடைய புகழ்ச்சிக்கு மாத்திரம் நான் அருகனல்லவே என்

பதுதான் என்னைப்பலமாக வருத்துகின்றது. நான் தங்களுக்குச் செய்ய சாத்யமற்றதான உதவி யாதும் செய்யவில்லையே! நம்முடைய கையால் ஆகுமான காரியத்தைச் செய்ததற்கு வியப்பொன்றுமில்லையே. நம் முடைய கண்ணெதிரில் ஓர் உயிர்போகும் தருவாயிலிருக்கும்போது அதைத் தடுக்க வழிதெரிந்திருந்தும் அதைத் தடுக்காமலிருக்க யாருக்குத்தான் மனம்வரும்? நான் என் கண்ணால் ஒரு அபா யத்தைக் கண்டபிறகு அதைத்தடுத்தது ஓர் அதிசயமல்லவே நான் அவ்விதம் ஒன்றும் அதிகமாகச் செய்தவனல்லேன். இதற்காகத் தாங்கள் கேவலம் சிறியவனும் அறியாதவனுமாகிய என்னைப்புகழ்ந்து கூற வேண்டாம். நான் தங்களுடைய ப்ரியத்திற்குப் பாத்திரமாக விருப்பதொன்றே எனக்குப் பேரானந்தமும், பெரும்பாக்யமுமாகும். அன்பரே! தாங்கள் என்மீது கோபித்துக்கொள்ளலாகாது. நான் பிறந்து இது பரியந்தம் என் பெற்றோரின் அனுமதியின்றி ஒரு காரி யத்தையும் செய்தவனல்லேன். நான் அவர்களின் உத்தரவைப்பெரு முன்னம் எங்ஙனம் விடைபகருவேன்? மேலும் நான் ஒரு வைத்தி யரின் கீழே அடிமை வகித்துள்ளவன். என்னையவர் எவ்வாறு நடத்திய போதிலும் அதற்குட்பட்டு நடக்கவேண்டியவன் நான். இப்பொழுது இங்கு இரண்டுநாளாக இருப்பதுபோல அடிக்கடி இன்னும் எங் கெங்கே யெல்லாம் இருக்கவேண்டுமோ? அத்தகைய நான் இவ்விடத்தி லேயே இருப்பதென்றால் சரியாக விருக்குமோ? எனக்காக தங்களுக் குக் கஷ்டம் நஷ்டம் எல்லாம் ஏற்படுவதற்கு இடங்கொடுக்க என் மனமிடந்தருமா? தங்களின் பிரியம் என்னிடத்தில் என்றும் மாறும விருந்தால் போதுமானது. தாங்கள் இஷ்டப்படி எனக்கு ஓய்வு உண் டாகும் நேரத்தில் நான் தங்களைவந்து தரிசித்துச் செல்கிறேன். மற்ற படிக்கு என்மேல் தாங்கள் தயைபாலித்துக் கோபியாதிருக்கும்படிக்கு வேண்டுகிறேன்'' என்று வெகு விநயமாகவும் கண்ணியமாகவும் மொழிந்தான்.

இதைக் கேட்ட முதலியார் "அப்பா, சுந்தரம்! என் கஷ்டத் தைப்பற்றி நீ யோசிப்பது சிறிதும் வேண்டாம். அந்தரங்கப் பிரி யத்துடனும் என் மனப்பூர்வமான இஷ்டத்துடனும் உன்னை நான் வேண்டுகின்றபோது யாதுக்கு மயங்கவேண்டும்? என்னருமை சுந்த ரம்! நீ யான்கூறுவதற்கு மறுத்துக் கூறலாகாது. எனக்கு உன்

முகாரவிந்தம் எத்தகைய இன்பத்தைக் கொடுக்கின்றதென்பதை கூறுவதற்கே சாத்யமன்று. அத்தகைய பாசம் உன்னிடம் எனக்கு உண்டாய்விட்டது. துன்பமுற்ற இக்காலத்தில் இன்பநிதியாகிய உன்னைக் காட்டிய கடவுளின் சரணகமலங்களை நான் எவ்வாறு நம்பி ஸ்தோத்திரம் செய்கின்றேனென்பது உனக்குத் தெரியாமலிருக்கலாம். என் மனோரதத்தை நீ கட்டாயம் பூர்த்தி செய்யவேண்டும். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எல்லாமறிந்த உத்தமன் நீயாகவிருக்க எனது நிலைமையைக் கேட்டபிறகு நீ அதை மறுக்கமாட்டாயென்றே எதிர்பார்க்கிறேன். என்னுடைய இன்னொரு வெகுநாளையநோக்கத்தையும் கூறிவிடுகின்றேன் கேள். என்னருமைப் பத்மாவை அவளுக்குத் தகுந்த மணாளனுக்குத் தேடிக்கொடுக்க வேண்டுமே என்ற நோக்கம் பெரிதாக உண்டு.என்பத்மத்திற்கோ, நாயகன் உத்தமகுணங்களமைந்த புத்திமானாகவிருக்க வேண்டுமென்ற கோரிக்கை யொன்றேயன்றிக் கேவலமான பணம் நிறையவிருப்பவர்களை அவள் கனவிலேனும் நினைக்கவில்லை. நான் கோரியபடி சகல அம்சங்களாலும் மேன்மை வாய்ந்து சிறந்து விளங்கும் சிங்காரபுருஷன் நீ தான் என்று என்மனத்தில் பதிந்துவிட்டது. ஆகையால் உன் பெற்றோரின் சம்மதப்படி அதையும் நீ நிறைவேற்றவேண்டும். இன்று முதல் நீ இந்த வீட்டை விட்டுப் போகவேகூடாது'' என்று வெகு பக்ஷத்துடனும் ஆநந்தக் கண்ணீர் பெருக தேகபரவசத்துடனும் கூறினர்,

தான் முற்றிலும் எதிர்பாராமல் ஏங்கியிருந்த விஷயத்தைப்பற்றி முதலியார் ஒருமுறைக்கு மும்முறை ஊர்ஜிதப்படுத்திப் பேசியதைக் கேட்டதும் சுந்தரன் தான் இனி எந்தவிதமாகப் பதிலளிப்பது என்பதை யறியாதவனாய்த் தயங்கினான்; மனத்தில் தன்னைமீறிப் பொங்கி வரும் இன்பத்தை யடக்கிக்கொண்டான்; தன்னை முன்பின் அறியாதவரான முதலியார் தன்னிடம் கரைகடந்த பிரேமைவைத்து அந்தரங்கப் பிரியத்துடன் கூறியதைக்கேட்ட அவன்மனம் நெகிழ்ந்து பரவசமாய்விட்டது. இவர்கள் சம்பாஷணையில் தட்டில் வைக்கப்பட்டிருந்த பலகாரங்களைப் புசிப்பதையும் மறந்து ஒரு துணுக்கை எடுத்து வாயில் போட்டுக்கொள்வதும் பிறகு உண்ணாமல் பேச்சில் இருப்பதுமாகவே இருந்தார்கள். சுந்தரன் பதில் கூறாமல் தியங்குவதைக் கண்ட முதலியார் வெகு சந்தோஷத்துடன் "அப்பா சுந்தரம்! நீ

பேசாமலிருப்பதைக்கண்டு என்விருப்பத்திற்கு இணங்கி யான்கூறியதை அங்கீகரித்ததாகவே நான் நினைக்கிறேன். ஆஹா! நான்செய்த பாக்கியந்தானென்னே! இதோ இப்பொழுதே உனது தகப்பனருக்கு ஒருகடிதம் எழுதிவிடு. பிறகு கடவுளிருக்கிறார்............என்ன இது? தட்டில் வைத்தவை அப்படியே இருக்கின்றனவே! அவைகளைப் புசித்துவிட்டு மீண்டும் போட்டுக்கொள்ள வேண்டாமோ! சாப்பிடப்பா!'' என்று உருக்கமாகக் கூறினர்.

பிறகு இருவரும் தட்டிலிருப்பதை உண்டார்கள். முதலியார் கூஜாவிலிருந்த பாலைக்காட்டிச் சுந்தரனெதிரில் வைத்துவிட்டு "எங்கள் வீட்டில் காப்பி குடிக்கும் வழக்கமில்லை. உனக்கு வழக்கமாக இருந்தால் தயாரிக்கச்செய்கிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட சுந்தரம், சிரித்துக்கொண்டே பேசத்தொடங்கி, கூஜாவில் எங்கே காப்பி வைத்திருக்கின்றதோ என்று நான் பயந்துவிட்டேன். நல்ல வேளை பாலாகவிருந்ததே! எனக்குக் காலை மாலையில் காப்பி வழக்கம் கிடையாது. காலையில் வெறும் பலகாரம்தின்பேன்; வேண்டுமானல் பால்தான் சாப்பிடுவேன். என்னை என் பெற்றோர் இவ்விதமே பழக்கிவிட்டார்கள். இந்தக் காலத்தில் கூட தங்களைப் போல் காப்பி சாப்பிடாதவர்களுண்டோவென எனக்கு வியப்பாக இருக்கின்றது?'' என்றான்.

அதைக் கேட்ட முதலியார் "அப்பா! நான் அனேகமாகக் காலையில் எதுவும் சாப்பிடுகிற வழக்கமே கிடையாது. என்னுடைய பழக்கமெல்லாம் கர்னாடகமானதே. என் பத்மவல்லியும் என் மாதிரிதான். எங்கள் வீட்டில் யாரேனும் விருந்தாளிகள் வந்தார்களேயானல் யாராருக்கு என்னென்ன தேவையோ அதனைத் தயார்செய்து கொடுப்போம். எங்களுக்கு மாத்திரம் அந்தப் பழக்கமே இல்லை. அவர்களுக்காக நாங்கள் பலகாரமும் பாலும் சாப்பிடுவோம். தினப்படி காலையில் ஸ்வாமியின் நிவேதனத்திற்காக எதைச் செய்கிறோமோ அதைத்தான் சாப்பிடுவது; எங்களுக்கென்று வேறு தயாரித்துக்கொள்ளும் வழக்கமே இல்லை. ஸ்வாமிக்குக்கூட சிலநாள் பழவர்க்கங்களும் பாலும் நிவேதனம் செய்தால் அவைகளையேதான் நாங்கள் உட்கொள்வோம். இதோ இந்தப் பாலைப் பருகு'' என்றார். சுந்தரன் அதை வாங்கி அருந்தினன். முதலியாரும் பாலைப் பருகி

ணர். பிறகு இருவரும் அவ்விடத்தை விட்டு எழுந்து ஹாலுக்கு வந்தார்கள். அப்போது நடராஜனும் முதலியாருடைய குமாஸ்தாவும் வாடிய முகத்துடன் அவ்விடத்திற்கு வந்தார்கள். இவர்களைக் கண்ட முதலியார் பதறிய மனத்துடன் பேசத்தொடங்கி "ஹா வந்தீர்களா! ஏன் இத்துணை நேரமாய்விட்டது? காரியம் என்னவாயது?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

இதைக் கேட்ட அவ்விருவரும் "காரியமாவதற்கென்ன தடையிருக்கிறது? காரியமாய்விட்டது. நாங்கள் நேற்று சென்றதும் முதலில் அந்தக்காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டிய பிரயத்தனத்தை எடுத்துக்கொண்டு அதற்கு யாரரைப் பார்க்கவேண்டுமோ அவர்களை எல்லாம் பார்த்துவிட்டு மாஜிஸ்திரேட்டிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு ஜாமீன் பணத்தையுங் கட்டி நாங்களிருவரும் கையொப்பமிட்டுவிட்டு நேரே செல்லப்பாவை அழைத்து வருவதற்குச் சிறைச்சாலை சென்று உத்தரவை அவனுக்குக் காட்டி வீட்டிற்கு வரும்படி அழைத்தோம். அவன் அவ்விடம் சிறைச்சாலை என்பதையும் கவனியாமல் காதில் நாராசம் காய்ச்சி விடுவதுபோல் சரமாரியாக உங்களைத் திட்ட வாரம்பித்து விட்டான். அவனுக்கு நல்மொழிகள் கூறி வெளியில் அழைத்துக்கொண்டு வருவதற்குச் சுமார் 4 மணியாய்விட்டது. பிறகு அவனை வீட்டிற்கு வரும்படி எங்களாலானவரையில் அழைத்தோம். அவன் ஒன்றுக்கும் அசையவில்லை. அவனை முதலில் நீங்கள் அழைத்ததற்கு அவன் வரவில்லையல்லவா? அதற்காக நீங்கள் அவனை எவ்வாறுயினும் இங்கு வரவழைக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் பெரிய சதியாலோசனையைச் செய்து அவனுக்கு ஒரு நண்பன் கடிதமெழுதுவதுபோல் டீ பார்ட்டி என்று மோசடியாகப் பொய்க் கடிதம் எழுதி அவனை ஒரு வீட்டிற்கு வரும்படி செய்தீர்களாம். அவன் முதலில் அதை உணராமல் அங்கு சென்ற பின்புதான் உண்மையை அறிந்தானும். பிறகு பக்கத்து வீட்டுத் தாசியிடம் அந்தரங்கத்தில் தாங்கள் பேசி விஷயத்தை முடிவு கட்டிக்கொண்டு அவள் வீட்டில் இன்னும் யாரையோ உள்ளேயிருந்து வெளியில் வந்து தனக்கு உதவி புரிவதுபோல் நடிக்கும்படிசெய்து பிறகு தன்னையே அந்த வீட்டில் திருடிவிட்டான் என்று அவமானப்படுத்திப் பலர்கண்டு நகைக்கும்படிச் செய்தீர்களாம். இப்படி செய்தால் தன்னை

உங்களிஷ்டப்படி திருப்பி விடலாமென்கிற உள்கருத்தை வைத்துக் கொண்டு வீணுகவும் அநியாயமாகவும் அவனை நீங்களே இவ்வாறெல்லாம் செய்தீர்களாம். இப்படியெல்லாம் சொல்லி இன்னும் பலவாருக இன்னதுதான் சொல்லுகிறேம் என்பதையே மறந்து தாறுமாருகக் கூறி வாயில் வந்தபடியெல்லாம் திட்டவாரம்பித்துவிட்டான். அவன் கூறும் கர்ண கடூரமான வார்த்தைகளைக் கேட்டுத் தாங்காமல் நாங்கள் எத்தனையோவிதமான வார்த்தைகளை யெல்லாம் கூறி 'உனக்கு டீ பார்டி என்று அழைப்புப்பத்திரமனுப்பிய நண்பன் பெயரைச்சொன்னல் நாங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டிய முயற்சிகளைச் செய்கிறேம். நீ வீணுகப் பெற்றேரை வசைகூருதே." என்று சொன்னேம். அவன் அவைகளைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவன் காதலித்திருக்கும் பெண்ணை அவன் மணக்கக்கூடாதென்னும் நோக்கத்துடன் அந்தரங்கச் சூழ்ச்சிசெய்து அவனைப்பற்றி ஏதேதோ விதமான கடிதங்கள் மூலமாகவோ ஆள் மூலமாகவோ அபாண்டமான சொற்களைச்சொல்லி பெண் வீட்டாரின் மனமும் கலங்கும்படியாகத் தாங்களே செய்துவிட்டீர்களாம். அத்தகையபெற்றேர் இருந்தென்ன இறந்தென்னவென்னும் கருத்துடன் தான் போலீஸாரிடம் பெற்றேர் இறந்துவிட்டதாகக் கூறினனும். போலீஸார் அதை முதலில் உண்மையென நம்பியிருந்தார்களாம். பிறகு நேற்று அவன் தனதுகாதலிக்குக் கடிதமனுப்பினனும். அதில் அவள் அவனுக்கு உதவி புரிய மாட்டேனென்றும் தனக்கும் அவர்க்கும் யாதொரு சம்மந்தமும் இனிவேண்டாம் என்றும் கண்டிப்பாக எழுதிவிட்டாளாம். போலீஸார் செல்லப்பாவின் பெற்றேர் இறந்ததாகவே எண்ணியிருந்தமையால் தங்களின் புதல்வன்தான் அவன் என்பது அவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதாம். செல்லப்பா அந்தக் கடிதத்தைப்பார்த்து அப்படியே இடிந்துபோய் அரைமணிநேரம் ப்ரக்ஞையே யில்லாதவனய் விட்டானும். சேவகன் அந்தக் கடிதத்தைப்பார்த்துப் பின் இவ்வளவு கண்டிப்பாக இவர்கள் எழுதியிருப்பதால் இவனுடைய தகவல்களை அவர்களையே விசாரித்தால் தெரியும் என்று எண்ணி அந்தப் பங்களாவிற்கே சென்று காந்தாமணியை விசாரித்தானும். அந்தப் பெண்மணி 'அவன் யாருடைய பிள்ளையோ எனக்குத்தெரியாது. எங்கள் வீட்டில் சோறு தின்றுகொண்டிருந்தான். அவன் யோக்கிய

னென்று எண்ணி நாங்கள் அவனுக்குச் சாப்பாடுபோட்டு வந்தோம். அவன் அயோக்யன் என்று அறிந்த பின்னர் அவனுடைய பழக்கம் எங்களுக்கு வேண்டாமென நாங்கள் விலக்கிவிட்டோம். அவ்வளவு தான் அவனுக்கும் எங்களுக்கும் சம்பந்தம்; வேறு எதுவும் எங்களுக்கு அவனைப்பற்றித் தெரியாது' என்று அழுத்தமாகக் கூறிவிட்டாளாம். பிறகு போலீஸார் அவனை எவ்வளவு கேட்டும் உண்மையைக் கூறவே இல்லையாம். போலீஸார் அப்போதே செல்லப்பாவைப் புகைப் படமெடுத்துக் கொண்டார்களாம். அந்தப்படத்தைப் பத்திரிகையில் பிரசுரித்து அனுப்பினால் அவனைக் கண்டு பழகியவர்களோ அல்லது உற்றார் உறவினர்களோ பார்த்து உண்மையைக் கூறக்கூடும் என்ற நோக்கத்துடன் அந்தப்படத்தைப் பிளாக்கு செய்தார்களாம். அவர்கள் அதோடுவிடாமல் அவன் கூறுவது உண்மையா அல்லவாவென்பதையும் விசாரித்துக்கொண்டே வந்தார்களாம். நேற்றுக் காலை பத்திரிகையை அவர்கள் பிற்பகலே கண்டார்களாம். பிறகு அவன் கூறியது பொய் என்று அறிந்து அதனையொரு குற்றமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். அவர்கள் நமக்கு ஆளையனுப்ப எண்ணியிருந்த தருணம் நாங்களும் போய்ச் சேர்ந்தோம். பிறகு நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு அவனை வெளியில் அழைத்துவந்தால் அவன் இத்தனை பேச்சும் பேசி இந்த வீட்டிற்கே இனி அடியெடுத்து வைக்கமாட்டேனென்றும் தனது பெற்றோர்களே தனக்குச் சத்ருவென்றும் நாங்கள் வாயினால் சொல்லக் கூசும்படியான அத்தகைய வார்த்தைகளையெல்லாம் கூறி ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டான். நாங்கள் ஒரு வீதியில் நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு மோட்டார் அவ்வழியாகச்சென்றது. உடனே செல்லப்பா அதை நிறுத்தச்செய்து எங்களை உதறித்தள்ளிவிட்டு அதில் ஏறிக்கொண்டு சென்றுவிட்டான். அந்தக் காரில் யாரோ ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அந்த வண்டியைப் போக ஒட்டாமல் தடுக்கவேண்டுமென்று எண்ணி முயல்வதற்குள் வண்டி விற்றென்று போய்விட்டது. அந்த வண்டியின் நம்பரைப் பார்த்தோம். அது வாடகை வண்டியாக (டாக்ஸியாக) விருப்பதைக் கண்டோம். அப்போது மணி இரவு 7-ஆய்விட்டது. உடனே நாங்

கள் அன்று காலைவந்த பத்திரிகை ஆபீசுக்குச்சென்று அவன் இன்னார் புதல்வன் என்பதை யார் தெரிவித்தார்கள் என்று விசாரித்தோம். அந்த விவரத்தை எழுதி உறையிலிட்டு யாரோ நேரில் கொண்டு வந்து கொடுத்ததாகவும், அது பொதுவிஷயமாகையினால் அதைப் பத்திரிகையில் பிரசுரித்ததாகவும் கூறிக் கடிதம் கொடுத்த மனிதரின் விலாசத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். நாங்கள் உடனே அங்கு சென்று விசாரித்தோம். செல்லப்பா காதலித்திருக்கும் காந்தாமணியின் வீட்டு குமாஸ்தாவாகவிருக்கும் மனிதனும் அவன். பெரிய பணக்காரன் வீட்டுப்பிள்ளைத் திருட்டுப் புத்தியுடனிருப்பதுமல்லாமல் தனது எஜமானியம்மாளுக்கும் வெட்கமின்றிக் கடிமெழுதியதை எண்ணியே அவனை வெளியிட்டு அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதியனுப்பியதாக அவன் தெரிவித்தான். நாங்கள் "அவன் அவ்வாறு ஒருநாளும் திருடியிருக்கமாட்டான். அந்த கைய துர்புத்தி அவனிடம் சிறிதுமில்லை; ஏதோ மோசடியாக இது நடந்திருக்கின்றது. இதைத் தீரவிசாரியாமல் தாங்கள் இவ்வாறு செய்தது பிசகல்லவா ?" என்று எங்களுக்கு தெரிந்தவரையில் ஏதோ கூறிவிட்டு நாங்கள் நேரே டாக்ஸி கம்பெனிக்குச்சென்று, செல்லப்பா ஏறிச்சென்ற காரின் வண்டியோட்டியைக்கண்டு அந்தக்காரில் பலான வீதியில் ஒருமனிதன் ஓட்டிய காரை நிறுத்தச்செய்து ஏறிச் சென்றானே. அந்த மனிதர்கள் எந்தத் தெருவில் எந்த வீட்டில் இறங்கினார்கள் என்று நயமாக விசாரித்ததில், அவர்கள் தங்கசாலைத் தெருவிலுள்ள ஆநந்தபவன் வாசலில் இறங்கி விட்டார்கள் என்று அவன் தெரிவித்தான். உடனே நாங்கள் அந்த வண்டியிலேயே ஏறி ஆநந்தபவனுக்குச்சென்று ஏதோ பலகாரம் வாங்குவதுபோல் நடித்துச் சில பலகாரங்களையும் வாங்கிக்கொண்டு அந்தவிடத்தில் முற்றிலும் தேடினோம். அங்கு அவனைக்காணவில்லை. பிறகு நாங்கள் அந்த வண்டிக்குச் சத்தங்கொடுத்து அதையனுப்பிவிட்டோம். அப்பொழுது 9-மணிக்கு மேலாகிவிட்டது. அங்கிருந்து செல்லப்பா எங்குச் சென்றான் என்று நாங்களறியக்கூடவில்லை. ஒருகால் நாளைக் காலை போஜனத்திற்கு அங்குதானே வந்தாலும் வருவான் என்று எண்ணி நாங்கள் நேற்று இரவு முற்றும் அந்த ஓட்டலுக்கு எதிரிலிருந்த ஒருகட்டிடத்திலேயே தங்கினோம். இன்றுகாலை 8-மணி வரையில் பார்த்

தோம்; காணவில்லை. பிறகு இனியும் அங்கு தாமதிப்பது வீண் யோசனை என்று எண்ணி நாங்கள் நேரே புறப்பட்டு ஒருகால் அடையாற்றிற்குப் போயிருப்பானே என்று எண்ணி அங்கு சென்றோம். அந்த பங்களாவின் வீதியிலிருந்த தோட்டத்தில் ஒருவஸந்த அறையிலிருந்து ஒருபாவை வெளிப்பட்டாள். நாங்கள் அங்கு யாரை விசாரிப்பது என்று தயங்கிக்கொண்டே இருக்கையில் அந்தப்பெண் கூசாமல் எங்களை நோக்கி 'நீங்கள் யார்?' என்று ஆங்கிலத்தில் கேட்டாள். பிறகு நாங்கள் செல்லப்பாவைத் தேடிக்கொண்டு வந்துள்ளோம். இங்கு அவன் வந்தானாவென்று விசாரித்தோம். அதைக்கேட்ட அந்த மாது செல்லப்பாவைப் பலவாறாக அவமதித்துப்பேசி 'அந்தத் திருடனை எங்கள் வீட்டில்தான் காணலாம் என்று வெகு புத்திசாலித்தனமாகத் தேட வந்தீர்களோ? அவனுக்கும் எங்களுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. 'நீங்கள் போகலாம்' என்று அலக்ஷியமாகக் கூறினாள். நாங்கள் மிகவும் வருத்தமுற்று உடனே நேரே இங்கே வந்து சேர்ந்தோம்." என்று பரிதாபத்துடனும் துக்கத்துடனும் கூறினார்கள்.

இந்த விபரீதமான செய்தியைக்கேட்ட முதலியாரும் சுந்தரனும் அப்படியே அசைவற்று "ஆ! இப்படியும் நடக்குமோ!" என்று கூறி விழிக்கின்றார்கள். முதலியார் கண்ணிலிருந்து அருவிபோல் தண்ணீர் பெருகுகின்றது. 'ஐயோ! இந்த ஒரு புத்திரனால் எனக்கு எத்தனை அவமானம்? எவ்வளவு அவதூறு? எத்தகைய அபாண்டமானவசை? இவைகளையெல்லாம் அடையவேண்டியகாலம் வந்துவிட்டதே!" என்று தம்மையறியாமல் புலம்பவாரம்பித்துவிட்டார். அவர் உயிரே துடிக்கவாரம்பித்துவிட்டது. அருகிலிருந்த சுந்தரன் அவரைப் பலவிதமாகத் தேற்றினான். அரைமணி நேரம் முதலியார் ஸ்மரணையே அற்றுவிட்டார். பிறகு தெளிந்து எழுந்தவுடன் "ஐயோ! என்னருமை மகனே! உன்னை அருந்தவஞ்செய்து பெற்று ஆயிரம் பாடுபட்டு வளர்த்து எத்தனையோ செல்வமாகவும் எனது உயிர்நிலையே நீயாகவும் மதித்து வந்த என்னையே உன்னுடைய சத்ருவெனவெண்ணிவிடும் காலமும் வந்துவிட்டதா? ஐயோ! உன்னைக்கெடுக்கவேண்டிய சதியாலோசனையை நானா செய்வேன்? அடடா! கடவுள் இந்தவிதமான கூத்தும் பாக்கி வைத்திருந்தாரோ!" என்று ப்ரலாபித்தார்......பிறகு தன்

னையே தேற்றிக்கொண்டு "உம். யார் தலைவிதியை யார் கண்டார்கள். எல்லாமவனருள். என்னப்பனே! பார்த்தஸாரதே! உன்பாதமே கதி என நம்பிய என்னை ஆட்கொண்டருள்புரிவதான கடமை உன்னுடையதல்லவோ? என்னை இவ்விதமும் பரீக்ஷிக்க வேண்டுமா?" என்று கண்கலங்கினர். இச்செய்தி லக்ஷ்மியம்மாளுக்கும் தெரிந்துவிட்டது. அவ்வம்மை நெருப்பின்மீது விழுந்த புழுவெனத் துடித்தாள். பிறகு அன்று பெரிய வைத்தியர் வந்தார்; பத்மாவுக்கு அன்று பல ஹீனம் அதிகமாகக் காணப்பட்டதேயன்றி ஜுரம் நன்ருகக் குறைந்திருந்தது. வேறு மருந்துகளைக் கொடுத்துவிட்டு முதலியாரிடம் சொல்லிக்கொண்டு சுந்தரனைப் பார்த்து "இன்று ஒருநாளைக்கு அருகிலிருந்து பார்த்துக்கொள்; நாளைக்கு இருக்கும் நிலைமையைப் பார்த்துக்கொண்டு செய்யலாம்; நேற்றையதினம் போல் ஒருகால் திடீரென்று மயக்கம், ஜுரம் முதலியன வந்தால் உடனே சொல்லியனுப்பு; நான் வருகிறேன் அவ்வாறு ஒன்றுமில்லாமலிருந்தால் நான் நாளைக்காலையிலேயே வருகிறேன் ஜாக்கிரதை." என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டார். பின் பத்மவல்லிக்கு யாதொரு தொந்தரவுமேற்படாமல் சுகமடைந்து கொண்டே வந்தது.

அன்று பங்களாவில் யாவரும் செல்லப்பாவைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். பத்மவல்லி அதிக நுண்ணறிவுடைய பாவையாகையினல் விஷயத்தை ஒருநொடியில் கண்டுகொண்டு அதை இந்திராணி மூலமாக சவிஸ்தாரமாகத் தெரிந்துகொண்டு கண் கலங்கினள். இந்திராணியும் நர்ஸும் அவளுக்குத் தேறுதல் கூறினர்கள். அன்று வேறு யாதொரு சம்பவமுமின்றிப் பொழுது போயிற்று. மறுநாள் காலையில் நர்ஸ் உத்தரவுபெற்றுக்கொண்டு போய்விட்டாள். பெரிய டாக்டர் வந்து பார்த்துவிட்டு "இனி நன்ருகக் குணமாய்விட்டது" என்றுகூறி வேறு டானிக்குகள் கொடுத்துவிட்டுச் சுந்தரனையும் இனி இங்கிருக்கவேண்டாம் எனக்கூறிப்போய்விட்டார். உடனே சுந்தரன் முதலியாரிடம் வந்து "அன்பார்ந்த பெரியீர்! அடியேனுக்கு உத்தரவு தரவேண்டுகிறேன். இனி நான் இங்கிருப்பது அநாவசியம்; தங்களிஷ்டப்படியே என் பெற்றேருக்குக் கடிதமெழுதி இருக்கிறேன். அவர்களின் ஆக்ஞைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்." என்று பீடிகை போட ஆரம்பித்தான்.

இதைக் கேட்ட முதலியார் "அப்பா! சுந்தரம் என்னுடைய மனத்திலிருப்பனவற்றையும், என்னுடைய தற்போதைய நிலைமையையும் நீ அறியாதவனன்று. என்னை இத்தருணத்தில் நீ கைவிட்டுச் செல்லலாகுமா? உன்னைப் பிரிந்திருக்க என்மனம் சற்றும் சம்மதப்பட வில்லையே! நான் எவ்வாறு உனக்கு விடைகொடுப்பேன்? நீ உன்னுடைய வைத்தியரிடம் போகவேண்டிய காரியத்தை நான் தடுக்கமாட்டேன்; மற்றவேளையில் நீ உன்னுடைய ஜாகை இதுவாகவே வைத்துக்கொள். மேலும் என்னுடைய பத்மவல்லிக்கு உயிர்ப்பிச்சையளித்த உனக்கு நான் இன்று விருந்து நடத்த ஏற்பாடுசெய்திருக்கிறேன். ஆதலால் இப்போது நீ வெளியில் செல்வதே கூடாது" என்று நடமாகக் கூறினர்.

சுந்தரன் என்ன பதிலளிப்பது என்பதே தெரியாமல் விழித்தான்; எனினும் தனக்கு விருந்து வேண்டாம் என்பதைக் கூற வேண்டுமென எண்ணி "ஐயா, என்னைத் தாங்கள் இத்துணை சொந்தமாகப் பாவித்துவருவது மிகவும் சந்தோஷமாகவே இருக்கின்றது. ஆனல் அன்னியரைப்போல் விருந்து வைப்பது நன்றாயிருக்கிறதா? நான் தங்களுடைய சொந்த மனிதனுகவிருக்க எனக்கு விருந்து எதற்கு? வேண்டாம். அதை நிறுத்திவிடுங்கள்" என்றான்.

முதலி:—அப்பா! உனக்காக நான் வைத்ததாக எண்ணாதே. என் கண்மணி பிழைத்ததைக்குறித்து சந்தோஷமாக விருந்து நடத்துகின்றேன். அதை நீ சிறப்பிக்கவேண்டாமா? அதையும் தடுப்பாயோ? என்று பரிகாசமாய்க் கேட்டார். பிறகு சுந்தரன் எவ்விதமும் பதில் சொல்ல வியலாதவனாய் ஒத்துக்கொண்டு, "எனது தந்தையிடமிருந்து நேற்று எனக்குக் கடிதம்வருகிற தினமாகையால் அது என்னுடைய அறையிலிருக்கும்; நான் சென்று அதைப் பார்த்துவிட்டு தங்கள் குழந்தைக்குக் கொடுத்திருக்கும் டானிக்கையும் வாங்கிக்கொண்டு உடனே திரும்பி வருகிறேன்" என்று கூறினான். பின் பத்மவல்லி அறைக்கு இருவரும் வந்தார்கள். பத்மா நாணத்தால் உடனே மெல்ல எழுந்து கட்டிலைப் பிடித்துக்கொண்டே இன்பகரமான வடிவமாகிய சுந்தரனைக் கடைக்கண்ணால் பார்த்தவண்ணம் நின்றாள். சுந்தரன் அவ்வறையில் வைத்திருந்த தனது பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு மரி




“என்ன அப்பா! டாக்டரவர்கள் பிரயாணமாய் விட்டார்களே!
........ ..........நீங்களும் வழிவிடத் தயாராய் விட்டீர்களே.” (பக்கம் 181.)

யாக்கிரதையாகப் பத்மவல்லியைப் பார்த்து "அம்மணி! நான் சென்று வருகிறேன். உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று புன்முறுவல் பூத்தவதனத்துடன் கூறினன்.

இதைக் கேட்ட காரிகை, கட்டிலடங்காத களிப்பு மேலிட்டவளாய்த் தன் தந்தையை நோக்கிச் சிரித்தவண்ணம் "என்ன அப்பா! டாக்டரவர்கள் பிரயாணமாய் விட்டார்களே! அவர்களைத் தாங்கள் இவ்விதம் அனுப்புவதுதான் அழகோ? அவர் நமக்குப் பரிந்து செய்த உபகாரத்திற்குத் தாங்கள் ஒரு விருந்தேனும் செய்து அனுப்பவேண்டாமா? அவரும் புறப்படுகிருர்; நீங்களும் வழிவிடத் தயாராய்விட்டீர்களே" என்று கூறினுள். இதைக் கேட்ட முதலியார் அளவுகடந்த மகிழ்ச்சியோடு பத்மாவையும் சுந்தரத்தையும் களிப்புடன் நோக்கியவாறு "எனதருமைத் தங்கமே! உன்னுடைய கருத்தின்படியே இன்று டாக்டரவர்களுக்கு விருந்து தயார் செய்திருக்கிறேன். நாம் எவ்வளவோ சிறப்பாய்ச் செய்யவேண்டுமென்ற அவா எனக்கு இருந்தும் தற்போதுள்ள நிலைமையில் வீட்டுவரையில் செய்ய உத்தேசித்தே ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர் வீட்டிற்கு ஏதோ முக்கியமான காரியமாகச்சென்று வரவேண்டுமாம். நமது வண்டியிலேயேசென்று திரும்பிச் சீக்கிரம் வந்துவிடுவார். நான் விருந்துடன் மாத்திரம் நிற்கவில்லை. அவரை நம்முடைய வீட்டைவிட்டு அனுப்பப்போவதேயில்லை. இங்கேயே இருக்கும்படியாகவும் கூறிவிட்டேன்." என்று முதலியார் கூறும்போதே பத்மா ஆநந்தத்தில் ஆழ்ந்தவளாய் "பேஷ்; நன்றாகச்செய்தீர்கள். நம்மையவர் ஆதரித்ததற்குப் பதிலாக அவரை நாம் நம்முடைய ஆயுள்பரியந்தம் ஆதரிக்கவேண்டியது நமது கடமை என்பதை உறுதியாகக் கொள்ளுங்கள்" என்றாள். தமது புதல்வி வெகு சாதுர்யமாயும் காம்பீரமாயும் இருகருத்துகள் உள்ளடங்கியவாறு கூறியதைக்கேட்டுப் பூரித்து முதலியார் நின்றார். சுந்தரனும் தாங்கவொண்ணுத மனவெழுச்சியினல் மதிமயங்கி இன்பமயமாக மாறி நின்றான். பிறகு சுந்தரன், இருவரிடத்திலும் சொல்லிக் கொண்டு வெளியே சென்றுவிட்டான்.

அன்று சுந்தரனுக்காகத் தயார் செய்யப்பட்ட அதிமாதுரியமான அறுசுவையுண்டிபதார்த்தங்களும் முப்பழவகைகளும் புத்துருக்கிய நெய்யும், ஆடைத்தயிரும் இன்னும் மற்ற எல்லாவிதச் சிறப்புடன்

பகல் 12 மணிக்குள் எல்லோரும் விருந்துண்டு எழுந்து தாம்பூலாதிகள் தரித்துக்கொண்டார்கள். சுந்தரன் தனது மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து முதலியாரிடம் காண்பித்து "அன்பீர்! இது என் தந்தை எழுதிய கடிதம். அவருக்கு இரண்டு நாளாகச் சிறிது தேக அசௌகரியமாக விருக்கின்றதாம். ஆதலால் என்னை இரண்டு நாளைக்கு வைத்தியரின் உத்தரவு பெற்றுக் கொண்டு தகுந்த மருந்துகளை எடுத்துக் கொண்டு வரும்படியாக எழுதியிருக்கிறார். நான் உத்தரவு பெற்றுக்கொள்ளலாகுமா?" என்று நிரம்பவும் பணிவாகக் கேட்டான்.

இதைக் கேட்ட முதலியார் சற்று வருத்தத்தோடு "அடாடா! தேக அசௌக்கியமும் இப்போது வரவேண்டுமா? இதுவும் எனது துரதிர்ஷ்டந்தான். உம். இத்தகைய சமயத்தில் நான் என்ன சொல்வது. இருந்தாலும் இன்று ஒரு நாள் இங்கு இருந்துவிட்டு நாளைக் காலையில் வைத்தியரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு உடனே நீ ஊருக்குச் செல்லலாம். இன்றுமாத்திரம் என்னோடு இருந்துவிடு" என்று கெஞ்சினார். சுந்தரன் அதற்குச் சம்மதித்தான். அன்று வேறு சம்பவம் எதுவுமின்றி வெகு இன்பகரமாகப் பகல் பொழுது கழிந்தது. இரவில் எல்லோரும் தத்தம் அறைகளில் சயனித்துக் கொண்டார்கள். பத்மவல்லியும் வழக்கம்போல் தனது அறையில் சயனித்துக் கொண்டாள். சுந்தரன் அவனுக்காக விடப்பட்ட ஒரு பெரிய ஹாலில் படுத்தான்.

இரவு 11 மணிக்குமேல் கறுத்த நிறமும், தடித்த மேனியும், பார்வைக்கு பயங்கரமான ரூபத்தையுமுடைய ஒரு மனிதன் சந்தடிசெய்யாமல் மெல்லப் பதுங்கிப் பதுங்கி நடந்தவாறு பத்மவல்லி படுத்திருந்த அறைக் கதவை ஓசைசெய்யாமல் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டான்.

182834

இனாம்! இனாம்!

# முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம், இனாம்,




எங்களின் " தாரா " லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முக்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

---

ஒருமாதம்

# பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.




22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்

தபால் நெ, 508, பி, டி மதராஸ்.

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள:—

(1) ராவ்பஹதூர் ஜெ, செல்வரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R, ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமியவூ சித்திரைமீ முதல் எட்டு வருஷகாலமாய் தேதி தவறுமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்து லாவியதும், அப்போது நடந்த "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கரிகள் பயிரிட்டு கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபி டோமியாவுக்குப் போவதெனத் தீர்மானித்து சந்தாதாரருக்கு முன் கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கி யன்னியில் பத்திரிகை யனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்த நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பதத் ரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மெண்டில் மிகக் கியாதியாய் 30 வரு ஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களி லுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவரு மான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ, செல்வரங்க ராஜா அவர்களும் பத திரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத் திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடை யில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதி லும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையா தெனபது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவ சாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிபபடுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன்" அக்ஷயவூ சித்திரைமீ முதல்தேதி முதல் வெளிவந் திருக்கிறது, வி.பி.மூலமாய அனுப்பினல்ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர்செய்து தஙகள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்று கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக்.

குறைந்த சநதாவில் நடைபெறும் உயர்ந்த
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

# எது?

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

## "நச்சினார்க்கினியன்" தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ 2 8 0

விளம்பர விகிதம் :—பக்கத்திற்கு ரூ, 5 அரைப்பக்கத்திற்கு ரூ, 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதார்க் குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க, மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்புக.

**பண்டித - ம. கோபால கிருஷ்ணையர்,**
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

---

## காமதேனு,

### ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.

பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

கிராமமுன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷயங்கள், ஐக்கிய இயக்கம், கிராம பஞ்சாயத்துகள், விவசாயம, வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்குரூபாய் 1—8—0 முனபணமாகக் கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

**R. ஆனந்தராவ், "காமதேனு" பத்திராதிபர்,**
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்

---

## ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடககிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48-பக்கங்களுள்ளவிஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0

**ஆனந்த போதினி ஆபீஸ், மதரூஸ்.**

# லோகோபகாரி.

## முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும் வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும.

வருஷ சந்தா ரூபாய் நாலு. வெளி நாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனும்.

——— காரியஸ்தர்,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.


---


## ரக்ஷையும் மந்த்ர சக்தியும்

துரதிஷ்டத்தையகற்றி சுகஜீவனத்தை நாடுவோர்க்கு அவசியமானவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கௌரவம், தனம், கல்வி பெருமைக்கு | 7 | 8 |
| ஆரோக்கியம், சரீரபலம் பெற | 7 | 8 |
| வாக்சாதுர்ய சக்திக்கு | 7 | 8 |
| நீதிவிவகார கெலிப்புக்கு | 10 | 0 |
| விளையாட்டு, பந்தயம் சீட்டு | 7 | 8 |
| விவகாரங்களில் ஜயிக்க | 10 | 0 |
| மாதரிடம் ஆடவரன்பு பெருக | 7 | 8 |
| ஆடவரிடம் மாதரன்பு பெருக | 10 | 0 |
| ஆடவராயினும் ஸ்திரீயாயினும் முறையே வசீகரித்துக்கொள்ள | 7 | 8 |
| நல மாசூல் அறுவடையாக | 7 | 8 |
| ரப்பி ஸாலமனின் ரக்ஷை | 15 | 0 |
| ஜயவீரஹீப்ரூவினு லணியப்பெற்ற ரக்ஷை இரண்டாவது ரகம் | 21 | 0 |
| முதலாவது ரகம் | 30 | 0 |

குறிப்பு:—மணியார்டராவது கவர்ண்மென்ட் கர்ரென்ஸி நோட்டாவது அனுப்பினால், வீட்டிற்கே நேராக ரக்ஷை வந்து சேரும். ரக்ஷைவேண்டுவோர் முழுக்கிரயத்தையும் அட்வான்ஸாக அனுப்பி விடவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது.

D. A. RAMA DUTH,
Astrologer
*No. 30 and 55*
*Chekku St.*
COLOMBO, (Ceylon),

நயம் ! வேகு நயம்

## உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

# கலர் புடவைகள்.

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்பு ரோஸ், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி. அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள்.

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

முதல் ரகம் விலை ரூ. 5-8-0; 2-வது ரகம் ரூ. 4-8-0 பூக்கொடிக் கரை செய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**பிளைன்:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு, முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்; பெங்களூர் முந்தாணி போட்டது; கலர்கெடாது; மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாது; ரம்மியமான தோற்றமுள்ளது, நேர்த்தியான நெசவு கொண்டது; நீடித்து நிற்பது; உறுதியானது; அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள். விலை ரூ. 12-8-0. ரவிக்கை துண்டு 1-க்கு 12 அணா.

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக்கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

| | | | |
|---|---|---|---|
| $18 \times 2\frac{3}{4}$ விலை | 13 | 8 | 0 |
| ரவிக்கை 1 முழம் | 0 | 14 | 0 |

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கறுக்காதது) வேலை செய்த உருப்படி 1-க்கு 3-8-0 அதிகம்.

## ஏஜண்டுகள் தேவை.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம்; ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால்பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி, ஜி. டி. சென்னை.

---

## கம்மபாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. பொது விஷயங்களும் கம்மகுல முன்னேற்ற விஷயங்களும் வெளிவரும். கிராமவாசிகளுக் கின்றியமையாதது. வருட சந்தா தபாற் செலவுட்பட ரூபாய் ஒன்றுதான். மிகக் குறைந்த சந்தா. விளம்பரங்களுக்கு ஏற்றது. நீண்டகால விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதமுண்டு. முன் பணமனுப்புதல் வேண்டும். மற்றும் விவரங்களுக்கு எழுதுங்கள்.

ஆர். வெங்கடசாமி நாயுடு,
பத்திராதிபர் "கம்மபாலன்" திருத்தங்கல். சாத்தூர்

இனம்! ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு இனம்!!

ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதிய

# போலீஸ்கிலி பொதி ராயர்

## சிரிப்பைத்தரும் துப்பறியும் நாவல்.

இதில் கயிற்றைக்கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ்புலி படும் திண்டாட்டம் படிக்கப்படிக்க ஓயாச் சிரிப்பைத்தரும்.

வத்ஸலா கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

# மதனசிங்கர்

## அல்லது

# உரிமை இழந்த சீமான்.

(திருத்தமான இரண்டாம் பதிப்பு.)

இந்த துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவலை படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில் வேறெவ்விதமான அவசர வேலை களிருப்பினும் அவைகளை மறந்து, இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு, வாசித்து முடித்த பின்னரே அவைகளைக் கவனிக்கச்செய்யும் என்பது நிச்சயம். விலை ரூ 1 4 0.

---

# சுந்தரவதனி

## அல்லது

# தர்மமே ஜெயமளிக்கும்.

இது ஓர் அதியற்புத சிங்காரமான காதல்ததும்பும் துப்பறியும் தமிழ் நவீனம். படித்தவுடன் திருக்கிடச்செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்ப வங்களாலும், ரகஸ்யக் கடிதங்களாலும் நிறையப்பெற்றது. விலை அணு 12.

## வசந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜெகன் மோகினிகள்.

இந்த இனிய துப்பறியும் நாவலில் துபபறியும் சிங்கமாகிய ஸிம்ஹளநாதர் தாம் முன்னமே காதலித்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப் பதும் ஜயசிங் என்னும் பரதேசி வருதலும், திலகசமுத்திரம் தோன்றி சில விஷ யங்களை உரைத்தலும், ஸிம்ஹள நாதரை கொலைசெய்ய முயற்சிப்பதும் இந்நாவ லின் கண் ரஸங்குறைவு படாமல் ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதற்குத் தூண்டும் இயல்புடையதாக எழுதியிருக்கிறது. விலை 0 12 0

## அனுபவக் குறிப்புகள்.

1. "பிறப்பது மண்மேல் இறப்பது மண்மேல்" என்னும் வாக்கியமொன்றுதான் உண்மையாக நடக்கின்றது. மற்ற எல்லாம் நம்முடைய மனத்தின் தோற்றமேயன்றி வேறில்லை. இன்று நம்முடைய சுகபோகங்களை எல்லாம் நிலைத்து நிற்கும் நித்திய சுகமென்று எண்ணி மனப்பால் குடிப்பது குழந்தைகள் மண்பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடுவதற்கு ஒப்பேயாகும். அப்பொம்மைகூட கைதவறுமளவிருக்கும் வரையில்தான் மகிழ்ச்சி. கைதவறிவிடுமாயின் பிறகு என்ன விடுகின்றது? அதேபோல நமது உயிர் வாழ்க்கையில் அநித்ய சுகமேயன்றி நித்யசுகம் கிடைப்பது அரிதாகவுளது.

2. உலகத்தில் கடவுளாலாக்கப்பட்ட அதிவிநோதமாகிய எப்பொருளைக் கண்டாலும் நமது மனம் ஆசைப்படுவது இயற்கையே என்றாலும் உண்மையாக அவைகளால் நமக்குச் சுகமில்லை. அவைகளை எல்லாம் படைத்த கடவுளொருவனே நமக்கு அழியாத ஆதியந்தமற்ற நித்யசுகத்தைக் கொடுக்கவல்லவன். அஃதே நமக்குப் பேரின்பமாகும்.

வை. மு. கோ.

* * * * *

உலகத்தில் சகல ஜீவராசிகளுக்கும் முக்கியமான வஸ்து சாக்ஷாத்பரம் பொருளேயாவர். அன்னவரை நம்முடைய பவபாசபந்தங்களை நீக்கி அவரது சரணாரவிந்தத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அனவரதம் பூஜைசெய்வது அத்யாவசியம். அவ்விதம் பூஜைசெய்வதற்கு பூஜாநிவேதன பரிமளத்ரவ்யமே முக்கியமானவை. அத்தகைய பரிமளத்ரவியங்கள் எங்களிடத்தில் மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். அதன் ஜாபிதா அடியில்காண்க. சந்தனம், பன்னீர், ஊதுவத்தி, காஷ்மீர், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், புனுகுசட்டம் முதலியவைகள் கிடைக்கும் ஏனைய மனிதர்களுக்கு உபயோகப்படும் ஹேராயில், பாரீஸ் ஸெண்டுகள், பாரீஸ் ஸோப்புதினுசுகளும், கிடைக்கும். உடனே தருவித்துக் கொள்ளத் தவறாதீர்கள்.

**கே. என். பட்டாசாரியார் அண்டு கோ,**

25, துளசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

**ஸ்ரீமான் வடுவூர் - கே. துரைசாமி அய்யங்கார் B.A.,**

எழுதிய

**காளிங்கராயன் கோட்டை ரகசியம்.**

(இரண்டாம் பதிப்பு)

இரண்டு பாகங்கள் விலை ரூ. 4/-

**வத்ஸா கம்பெனி,**

திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அமிர்தாஞ்சனம்




அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 — ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

**உடனே முந்துங்கள்.**

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிபோ,**
**7. தம்புச் செட்டி வீதி, சென்னை.**


Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S.E.